பக்கங்கள் - 32

ஆவணி - 2013 விலை :- 50 /=

பல்சுவை மாத புயலோசை

# ஸ்ரீ-தர்சனம்

SRI - THARSANAM

உண்மை - உறுதி - உயர்வு

இச் சஞ்சிகைக்கு உங்கள் ஆக்கங்களை எதிர்பார்ப்பதோடு, விமர்சனங்களையும் வரவேற்கின்றோம்.

புயல் :- 01

பதிவு இல/வடமா/கஅ/பண்/வவு/வவு/01/2012

புயலோசை :- 03

## சர்வதேச அரங்கில் பெண்கள்



## விடியலை நோக்கி...



## வடமாகாண சபைத் தேர்தல் அர்த்தமுள்ளதா , அரங்கேற்றமா ?



மாதிரி வினாத்தாள்கள் விஞ்ஞானம் :- 10 - 11, தமிழ் :- 10 - 11

5 ம் தரம் புலமைப்பரிசில் மாதிரி வினாக்கள் - 2013 -

## சமூகப் பணியில் வே. சுரேந்திரன்



சமூகப் பணியின்போது

# ஸ்ரீ-தர்சனத்தில்
## விளம்புரங்களுக்கான கட்டண விபரம்


| | | |
|---|---|---|
| முன்பக்கம் | அரைவாசி | 25,000 /= |
| | கால்வாசி | 20,000 /= |
| முழுப்பக்கம் | கலர் | 15,000 /= |
| | வெள்ளை | 10000 /= |
| அரைப்பக்கம் | கலர் | 5000 /= |
| | வெள்ளை | 2500 /= |
| காற் பக்கம் | கலர் | 2500 /= |
| | வெள்ளை | 1250 /= |
| சிறு விளம்பரம் | கலர் | 1000 /= |
| | வெள்ளை | 500 /= |

### ஸ்ரீ - தர்சனத்தில்

விளம்பரம் செய்வதற்காக
நீங்கள் கொடுக்கும் பணம் உங்களது
வியாபாரத்தைப் பெருக்குவதோடு
அப்பணம் தமிழ் மொழி வளர்ச்சிக்கும்.
வறுமையில் பாதிக்கப்பட்ட
மாணவர்களின் கல்வி
வளர்ச்சிக்கும் பயன்படும்
என்பதனை மறவாதீர்கள்.


# ரமேஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
# RAMESH TEXTILES

இங்கே சகலவிதமான புதிய வடிவமைப்பைக்கொண்ட ரெடிமேட்
ஆடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



- இங்கே சகலவிதமான புதிய வடிவமைப்பைக் கொண்ட
- சேட், ரீசேட், சல்வார், சாரி போன்ற ஆடைகளை
- சிறுவர் முதல் வளர்ந்தவர்கள் வரையானவர்கள்
- வேறெங்குமே இல்லாத மிகவும் மலிவான விலையில்
- உடனுக்குடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

இல :- 183/1.
பஸார் வீதி.
வவுனியா.


No:- 183/1,
Bazaar Street,
Vavuniya.

# ஸ்ரீ - தர்சனம்

2013 ஆவணி புயலோசை–03



ஸ்ரீ–தர்சனம்
ஆசிரிய பீடம்
0716746710



இல :– 45,
பாற்குழிவீதி,
தோணிக்கல்,
வவுனியா.



**பொறுப்பாசிரியர்**

கலையருவிப்புயல்

( பெ. ஸ்ரீகந்நேசன் )

**உதவி ஆசிரியர்கள்**

திருமதி - ஸ்ரீ.அஜந்தா

திரு வே. மோகன்

**பெரும் பொருளாளர்**

சமாதான நீதவான வே. சுரேந்திரன்

( அஸ்விகா ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் )

**வெளியீடு**

தாய்மொழி வளர்ச்சி மன்றம்


வாழ்ந்து வரும் சமுதாயத்தின் எச்சங்களை எதிர் கால சமுதாயத்திற்கு அளிப்பது வரலாற்று ஆவணங்கள் என்பது உறுதி. இதன் அடிப்படையில் வரலாற்று ஆவணமாக திகழ்வது சஞ்சிகையும் ஒன்றாகும்.மூன்றாவது மாதத்தில் காலடி பதிக்கின்றது, ஸ்ரீ–தர்சனம்(புயலோசை). தற்காலத்தில் வாசிப்பு பழக்கம் மிகவும் குறைந்து உள்ளது. இதனால் .நம்மவர்களிடையே எழுத்தாற்றல் இல்லாமல் போய்விட்டது. எழுத்தாற்றல் திறனை ஓரளவேனும் விருத்தி செய்யும் நோக்கில் இச் சஞ்சிகையை நாம் வெளியிடுகின்றோம்.

ஸ்ரீ–தர்சனம் இம்முறை பல்வேறு அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. சிறுவர் முதல் பெரியவர் வரையான அனைவரும் படித்து இன்புறகசுடிய ஆக்கங்களை இதில் காணலாம். காலத்தின் தேவை கருதி முன்னைய சஞ்சிகைகளை விடவும் இதில் சிலமாற்றங்களைச் செய்துள்ளோம்.

"ஒரு நூலுக்கு செலவு செய்யும் பணம் ஒரு முதலீடு"– என்பது பழமொழி இன்றைய கால கட்டத்தில் இது வெறும் வாய் மொழியாகவே உள்ளது.தற்காலத்திலும் நூலின் பயனை அறிந்த சிலர் வாழத்தான் செய்கிறார்கள். இதனால்தான் இவை போன்ற சஞ்சிகைகள் வெளி வருகின்றன.

எமது சமுதாயத்தில் புரையோடிப்போன சில தீய பழக்கவழக்கங்களை சுட்டிக்காட்டி அவற்றை இல்லாது ஒழிக்கும் நோக்கத்தோடு, பல படைப்பாளிகள் இம் முறை படைப்புகளை படைத்துள்ளனர்,என்றால் அது மிகையாகாது. அன்பான வாசகர்களே, தொடர்ந்து இச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு தயவுடன் உங்களின் ஆதரவை வேண்டி நிற்கின்றேன். உண்மை–உறுதி–உயர்வு என்ற அடிப்படையில் இச் சஞ்சிகை செயற்படும், என்பதை நீங்கள் மறக்க வேண்டாம்.

கலையருவிப்புயல்,
பொறுப்பாசிரியர்,
ஸ்ரீ–தர்சனம் ( புயலோசை )

puyalnesan@gmail.com
20.08.2013.

## ஸ்ரீ – தர்சனம் சந்தா விபரம்


| | | |
|---|---|---|
| ஐந்து வருடத்திற்கு | 60 × 50 | 3000 /= |
| நான்கு வருடத்திற்கு | 48 × 50 | 2400 /= |
| மூன்று வருடத்திற்கு | 36 × 50 | 1800 /= |
| இரண்டு வருடத்திற்கு | 24 × 50 | 1200 /= |
| ஒரு வருடத்திற்கு | 12 × 50 | 600 /= |

பொறுப்பாசிரியர்
ஸ்ரீ – தர்சனம்
இல :– 45,
பாற்குழி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

சந்தா அடிப்படையில் ஸ்ரீ தர்சனத்தைப் பெற விரும்பினால், 70041347 எனும் இலக்கத்திற்கு இலங்கை வங்கியில் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை மேலே உள்ளே முகவரிக்கு அனுப்பி வையுங்கள்





## கொய்யா



விலை மலிவான பழங்களிலும் நிறைய சத்தும், மருத்துவக் குணங்களும் உண்டு. விதை நீக்கப்பட்ட கொய்யா இதயத்துக்கு வலுவூட்டும் சக்தியுடையது. மலச்சிக்கலை நீக்கும் மகத்தான பழம் கொய்யா. விக்கல் வந்தால் கொய்யாபழம் உண்ணுங்கள் விக்கல் உடனே நிற்கும். இதில் வைட்டமின் 'சி மிகுதியாக உள்ளது. இதைத்தவிர 'ஏ', 'பி', வைட்டமின்களும் உள்ளன. ஒரு அவுன்சு பழத்தில் 1 கிராம் புரதம், 1 கிராம் கொழுப்புச் சத்து, 3 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்து, 4.1 கிராம் கார்போஹைட்ரேட், 0.3 கிராம் இரும்புச் சத்தும் உள்ளது.

கொய்வ பிஞ்சிற்கு பேதியை நிறுத்தும் குணம் உண்டு. கொய்யா இலையைக் கஷாயம் வைத்துப் பருகினால் வாந்தியும், பேதியும் நிற்கும். இந்த இலையை வாயிலிட்டு நன்கு மென்று வாய் கொப்பளித்தால் பல்வலி குறையும். கடும் பல்வலிக்கு இப்படி அடிக்கடி செய்தால் பலன் கிடைக்கும். கொய்யா இலை கொழுந்தை உண்டால் நன்றாக பசி எடுக்கும். குடல் வலுப்பெறும். அஜீரணத் தொல்லைகளுக்கு இலைக் கொழுந்தைப் பறித்து கழுவிச் சுத்தம் செய்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நன்மை.

## வில்வம் பழம்




இது ஏராளமான மருத்துவ குணங்கள் கொண்டது. மருத்துவ குணமுள்ள பழ வகைகளில் வில்வப்பழம் மிக முக்கியமானது. ஆனால் இப்பழத்தின் சுவையும், வழவழப்புத் தன்மையும் மற்ற பழங் ளைப் போல் நேரடியாக உட்கொள்ள முடிவதில்லை என்பதால் அவை மிக குறைந்த அளவிலேயே உணவுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

பண்டைய காலம் முதல் வில்வத்திற்கு சித்த ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கியத்துவம் உண்டு. இம் மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, பழம் அனைத்தும் மருத்துவக் குணம் நிறைந்ததாக உள்ளன.

வில்வப்பழத்திலிருந்துபெறப்படும்தைலம்,கண்ணெரிச்சல்,தலைவலியை போக்குவதுடன்,உடலுக்கு அழகும் உண்டாக்கும்.வில்வப் பழ பானம் குடல்புண்ணை ஆற வைப்பதற்கும்,குடலுக்கு வலிமைத் தருவதற்கும் பயன்படுகின்றது.

இப்பழத்தில் 61.5 நீர்ச்சத்தும்,1.8 புரதமும்,1.7 தாது உப்புக்கள்;32மாவுப்பொருட்கள்;55 மி.கி ரிபோபிளேவின் டீ-2,8 மி.கி உயிர்ச்சத்து C அடங்கியுள்ளன.வேறு எந்த பழங்களிலும் இல்லாத அளவிற்கு உயிர்ச்சத்து டீ அதிகமாக உள்ளது.

## பாதாம் பருப்பு



வாரத்துக்கு 5 நாட்கள் தினமும் 10அல்லது12 பாதாம் பருப்புகளைச் சாப்பிட்டு வந்தால் நீங்கள் உற்சாகத்தையும் உடல் நலத்தையும் பெறலாம். கொஞ்சம் கூடுதல் செலவு என்றாலும் ஆயுள் நீடிப்பது உறுதி. இதில் அதிகம் கல்சியம் உள்ளதால் ஒல்லியான பெண்கள் எலும்பு மெலிவு நோயில் விழுந்து விடாமல் பாதுகாக்கும். பாதாம் பருப்பில் மூளையையும் சிறுநிரகத்தையும் பாதுகாக்கும் பொஸ்பரஸ் உப்பு கல்சியத்தை விட இரு மடங்கு உள்ளது. இரத்த சோகையை குணப்படுத்தும் இரும்பு சத்தும் பாதாம் பருப்பில் தாராளமாக உள்ளது. கொழுப்பு சத்து அதிகமுள்ள பாதாம் பருப்பு இரத்தத்தில் உள்ள தீய கொலஸ்ட்ரோல் அளவை குறைகிறது. நல்ல கொலஸ்ரோலை அளவுடன் இருக்க உதவுகிறது. பாதாம் பருப்பு சாப்பிடுவதால் நமது ஜீரண சக்தி அதிகரிக்கும் என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்து உள்ளனர். நமது பெருங்குடலில் நல்ல பாக்டீரியாக்கள் இருக்கின்றன. இவை தீமை செய்யும் பாக்டீரியாக்களை அழித்து, ஜீரண சக்தியை அதிகபடுத்தும்.

# சிறுகதை நிதர்சனம்

இச்சிறுகதை தாய்மொழி வளர்ச்சி மன்றத்தினால் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றது.

# விடியலைத்  தேடி



தூக்கம் கண்களை விட்டு தூர விலகிய தால், கட்டிலில் புரண்டு படுத்துக்கொண்டிருந்தள் வதனா. நாளை விடிந்தால் தன் ஆசை மகன் பிரதீப்பைக் கட்டி அணைத்து முத்தமிடுவதை நினைத்து அவள் உள்ளம் பூரித்துப் போகிறது. பட்டப் படிப்பிற்காக லண்டன் சென்ற மகன் பிரதீப்பையே அவள் கண்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. இரவைப் பகலாக்கும் அந்த மின் விளக்கின் ஒளியிலே முத்துப்போன்ற பற்களால் புன்னகைத்துக்கொண்டு அவளையே உற்று நோக்குவதுபோல சுவரில் இருந்த மகனின் புகைப்படம் தொங்கிக்கொண்டிருக்கிறது. அதனை உற்று நோக்கிய வதனாவின் எண்ணங்கள்கடந்த கால நினைவுகளோடு சங்கமித்துக்கொள்கின்றது.

ஐந்துபேரைக்கொண்ட அழகான குடும்பத்தில் மூன்று அண்ணன்மாருக்கு ஒரே-யொரு தங்கையாக வந்துதித்தாள் வதனா தந்தை சிறுவயதில் இறந்துவிட தயான்பிலும் சகோதர பாசத்திலும் சந்தோசமாகவே அவளது காலச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. காண்போரை மயக்கும் கரு விழிகளுடன் கலகலவெனச்சிரிக்கும் அவளது உதடுகளும் அவளுக்கு மென்மேலும் அழகு சேர்த்தன. அவள் அழகினைக் கண்டு வியக்காதவர்கள் யாரும் இல்லை. துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்திலே நன்றாகப் படித்து உயர்தர வகுப்பில் பயின்று வந்தாள். எதையும் எதிர்பார்க்காது கல்வியிலே கண்ணாக இருந்த வதனாவின் வாழ்கையிலும் ஒரு வாலிபனாய் சிவா வந்துதித்தான். அவனது அன்புக்கு அடிபணிந்த வதனாவால் கல்வியை முழுமையாகக் கற்க முடியவில்லை நண்பிகள் எவ்வளவோ சொல்லியும் அவனது நினைவுகள் அவள் மனதைவிட்டகலாமல் செக்கு மாடு போல் சுற்றிச் சுற்றி வந்தன. அதனால் அவளது கல்வி கரைந்தது. அண்ணன்மார்களுக்கு காதல் விஷயம் தெரியவரவே சிவாவிடம் சேர்ந்து புதிய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்காக ஓட்டம் பிடித்தாள். சிலகாலம் சந்தோஷமா-கவே அவர்களது திருமண வாழ்க்கையும் சுழன்றுகொண்டிருந்தது. காலம் சில கடந்ததும் சிவா, தாய் வீட்டிற்கு வதனாவையும் அழைத்துக் கொண்டு சென்றான். வீட்டை அடைந்ததும் நாகம்போல் சீறத் தொடங்கினாள், சிவாவின்



அன்னை. " போயும் போயும் ஒரு பிச்சைக்காரியை இழுத்துக்கொண்டு வந்திருக்கிறாய் நீ என்ர ஒரே ஒரு ஆண்பிள்ளை எத்தனை இலட்சம் வேண்டவேணுமெண்டு கனவு கண்டனான் நீ... என்னடா ...... போயும் போயும்..... வீட்டிற்கு வேலைக்காரி இல்லை யென்று இருந்தனான்

கொண்டு வந்திட்டியா" எனப் பலவாறு திட்டினாள். தான் வைக்கும் ஒவ்வொரு அடியும் இனித்துன்பத்தின் அடியே என வதனாவுக்கு அப்போதுான் புரிந்தது.

உள்ளே சென்றதும் நான்கு - ஐந்து அறைகளைக்கொண்ட மாளிகைபோன்று அவனது வீடு அமைந்து காணப்பட்டது. தொலைக்கட்சி, ,பேன், ,பிறிச் என பலவகையிலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எதையுமே அறியாத வதனாவிற்கு அன்றுதான் அவனது குடும்ப நிலையைப் புரிந்தது, சிவாவின் அப்பா வெளிநாட்டில் இருப்பதாகவும் ஊரிலே சிவாவின் குடும்பம் பலவகையான வசதி வாய்ப்புகளுடனும் இருப்பது தெரியவந்தது. சிவாவின் வீட்டிற்கு வந்ததில் இருந்து வதனாவே வேலைக்காரியைப்போலஎல்லாவேலைகளையும் செய்து வந்தாள். இடையிடையே மாமியாரிடமிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் அவளைத் துன்பக்கடலில் ஆழ்த்தி விடும்.

நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகின ஒரு ஆண் பிள்ளைக்குத் தாயாகினாள் வதனா. சிவாவின் செயற்பாடுகள் கொஞ்சம் கொஞசமாக மாறுவதை அவள் மனம் உணரத் தவறவில்லை ஒருநாள் " சிவா நீங்க இப்ப நல்லாவே மாறிப் போயிட்டிங்க ஏன் சிவா " எனக் கேட்கவே " வதனா வாயை மூடிட்டு பேசாம இரு" இந்தப்பதிலே அவனிடமிருந்து ஒவ்வொரு நாளும் வரும். வில்லம்பு பட்ட மானாய் வேதனைப்பட்டாள் தாயன்பில் வாழ்ந்த அவளுக்கு பாசமே என்னவென்று அறியாமல் வெறும் கானல் நீராய் ஆனது அவளது வாழ்க்கை. சிவா குடிபோதைக்கு ஆளாகி ஒவ்வொருநாளும் தள்ளாடியபடியே வீட்டிற்கு வருவான். தட்டிக்கேட்பதற்கு யாருற்றவளாய் தவித்துப்போவாள் வதனா. சிவாவின் தாயோ தொலைக்காட்சியோடே இருபத்து நான்கு மணிநேரமும் இருப்பாள். ஏனோ தானோ என அவளும் அவளது பிள்ளையும் என்று வாழ்ந்து கொண்டிருந்தாள். ஒரு நாள் தொலை பேசி பெரும் சத்தமாக ஒலிக்கவே அதனை ஒன் செய்தாள் சிவாவின் தாய் " என்ன இஞ்ச வரப்போறியளா இன்னும் ஐந்து வருசம் உழையுங்கோ இவன் தம்பியையும் உங்க எடுத்து விடுவுங்கோவன்" எனக் கூறிவிட்டு " வதனா சிவா வெளிநாட்டுக்குப்போய் கொஞ்சகாலம் உழைக்கட்டும் அவன் போறதைப்பற்றி உன்னைக்கேட்டால் மறுக்காமல் ஓமெண்டு சொல்லு சரியா" எனக் கூறிவிட்டு, தசரதச் சக்கரவத்தி சிம்மாசனத்தில் வீற்றிருப்பதுபோல இருந்தாள். வதனாவுக்கோ என்ன நடக்கிறது, என்ன நடக்கப்போகிறது என்பதை நினைக்க ஒரே மனப்போராட்டமாகவே இருந்தது. சிவா ஏன் இப்படி மாறினான் என்ன காரணம் அறிவது எனும் உத்தேசத்தில் சிவாவின் வருகைக்காக எதிர்பார்த்து காத்திருந்தாள்.

வழமைபோலவே வேலை முடித்து வீடு வந்ததும் சில நிமிடங்கள் கழித்து " சிவா ஏன்.... ஏன் என்னோட சரியாப் பேசிறிங்கள் இல்லை என்ன நடந்தது சொல்லுங்கோ சிவா" என கண்ணீரத் துளிகள் முத்துக்களாய்ச் சிதறக் கூறினாள. ஒன்றுமே கேட்காத பிரமித்துப்போயிருந்த சிவாவையும் மறுபடியும் " ஏனென்டு சொல்லுக்கோ சிவா " எனக் கேட்டாள் "சொல்லொணுமா வதனா" எனக் கேட்கவே எனக்குத் தெரிஞ்சாகணும் சிவா என உள்ளுக்குள் பொங்கிக்கொண்டிருந்த உணர்வலைகள் எல்லாவற்றையும் கொட்டித்தீர்த்து விம்மி விம்மி அழுதாள். அதற்குச் சிவாவோ "உன்னை எப்ப மணமுடித்தேனோ அன்று தொடக்கம் என்ற நிம்மதி எல்லாமே கெட்டுப்போச்சுது அம்மா கூட சரியாப் பேசுறதில்ல வதனா உன்னாலதான் எனக்கு இந்த நிலமை"எனக்கூறினான். சிவாவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நெஞ்சில் முள்ளைபோல அவள் இதயத்தைக் குத்திக்கொண்டிருந்தன. " ஏன் சிவா இப்படியெல்லாம் பேசிறிங்கள்" என அவன் முகத்தை உற்று நோக்கினாள் வதனா இப்படித்தான் பேசுவேன் என ஆவேசம் பொங்கக்கூறினான். இவ்வாறு ஒவ்வொரு பொழுதும் வேதனை யுடனே கழிந்தது வதனாவிற்கு. சில காலம் சென்றதும் சிவா வெளிநாட்டிற்கு அனுப்பப்கட்டான். அவனுடைய பிள்ளையில் கூட இரக்கமில்லாத கொடுமைகாரி



யாக சிவாவின் தாய் இருந்தாள். யாவற்றையும் தாங்கிக்கொள்ளாதவளாய் வதனா தன் ஆசை மகன் பிரதீப்பை அழைத்துக்கொண்டு விட்டிலிருந்து வெளியேறினாள். வீதியைத்

தாண்டும் ஒவ்வொரு பொழுதும் அவளின் தாயின் ஞாபகங்கள் கண் முன்னே ஊர்வலம் வரத் தொடங்கியன. யாருமே அற்ற அநாதையாக வீதி யில் சென்று கொண்டிருந்தகள். ஆனால் அவள் மனச்சாட்சியோ " வதனா நீ வாழனும் உன்ர பிள்ளைக்காக வாழனும் வதனா " என ஒவ்வொரு நிமிடமும் கூறிக்கொண்டது. தாய் வீட்டிற்குச் செல்வதாயின் அண்ணன்மாரின் கோபம் தீர்ந்து இருக்குமா என எண்ணும்போது உள்ளம் பயத்தால் நடுநங்கியது. தன் நிலை இவ்வாறு இருக்கிறதே என தாய் அறிந்தால் அவளின் வேதனை பன்மடங்காகும் அதனால் அங்க செல்வதில்லை என முடிவெடுத்தாள்.



ஒரே மனப்போராட்டத்துடன் சென்று கொண்டிருந்தவள் திடி- ரென மயக்கமுற்று விழுந்தாள் " விழித்துப்பார்த்தபோது கிறிஸ்தவ தேவாலயத்தில் இருப்பதை அறிந்தாள். மதகுரு ஒருவரே தன் நிலை அறிந்து அவனைக் காப்பாற்றியதாக அங்கு நின்ற பெண்கள் சிலர் சொல்லவே தன் வாழ்வில் நடந்த சோகங்களையெல்லாம் ஒன்றும் விடாமல் செல்லிச் சொல்லி அழுதாள். அவர்களின் உதவ- ியால் மகனை விடுதி ஒன்றில் சேர்த்து படிக்க வைத்து தானும் தனியார் கம்பனி ஒன்றில் வேலைக்கு சென்று வந்தாள்.

காலங்கள் யாருக்காகவும் காத திருப்பதில் லைகடந் துசென்று கொண்டிருந்தனபிரதீப் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசி ய ரீதியில் முதலிடத்தைப் பிடித்து அனை- வர் முன்னிலையிலும் பாராட்டைப் பெற்றான். அவனுடைய அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் " இப்படியொரு கெட்டிக்காரப் பிள்ளையை நீங்கள் பெற்றெடுக்க தவம் செய்திருக்கவேண்டும் வதனா " எனக் கூறும்போது அவள் தன்னையே மறந்து விடுவாள் ஆனந்தக் கண்ணீருடன் மகனைக் கட்டித் தழுவிக்கொள்வாள். இவ்வாறு சிறு வயதிலிருந்தே துடிதுடிப்புள்ளவனாக பிர- தீப் மிளீர்ந்தான்.ஒரு நாள் " அம்மா எல்லாருமே அப்பா அப்பா என்று சொல்லுறாங்கள் எனக் அப்படி யாருமே இல்லையே" என்று கேட்டது அந்தப் பிஞ்சு உள்ளம். இப்படியொரு அப்பாவிற்கு நீ மகனாகப் பிறந்தாய் என்று எப்படிச் சொல்வது என் மகனோ என தனக்குள் நினைத்துக்கொண்டு" உன் அப்பா வெளிநாட்டில் இருக்கிறார் நீ பெரியவனானதும் வருவார் " எனப் பிள்ளைக்குச் சொல்லிவிட்டு வேலைசெய்யும் கம்பனிக்குப்புறப்பட்டாள். எதிரில் ஒரு முகம் தோன்றுகிறது அது வேறு யாருமல்ல சிவா இன்னுமொரு பெண்ணுடன் கலகலவெனச் சிரித்தபடி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருப்பதுதெரிகிறது. அதனைக் கண்ணுற்றவள் ஒரு கணம் உறைந்தே போனாள். தான் பெற்ற பிள்ளையைக்கூட நினைக்காத கல் மனம் கொண்டவனையா நான் நல்லவன் என நினைத்து ஏமாந்தேன் என அவள் மனம் நொந்து வாடுகிறது. " நடந்ததை நினைப்பதில் பிரயோசனமில்லை நடக்கப்போறதை இனிப் பார்ப்போம் " என நினைக்கும்போது அவளது தமிழ் பாட ஆசிரியர் கூறுவது ஞாபகத்திற்கு வருகிறது " எதற்கும் ஒரு காலம் உண்டு பொறுத்திரு மகளே இன்பத்திலும் துன்பத்திலும் ,சிரித்திரு மகளே மனிதகுலம் வாழ்வதிந்த தவத்திலே அதை அனுபவத்தில் எழுதி வைத்தான் புத்தகத்திலே ".

பிரதீப் வளர வளர அவனது அறிவுக் கூர்மையும் வளர்ந்து அவன் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளும் பருவத்தை அடைந்ததும் அவள் தனது வாழ்க்கையின் அத்தியாயங்களை ஒவ்வொன்றாகப் புரிவைத்தாள். " பிரதீப் நான் பட்ட வேதனை துன்பம் எல்லாம் தீர நீ நீ......... படிச்சு ஒரு வைத்தியராக வரவேணும் என்ற ஆசையை நிறைவேற்றி வைப்பாயா? " எனத்தனது மகனை கொஞ்சுவதுபோல் கேட்பாள் " அம்மா ... அம்மா... கண்டிப்பா... ஆசையை நிறைவேற்றுவனம்மா " என ஒவ்வொரு பொழு- தும் அவன் தாயாருக்குச் சொல்லி வந்தான்அவ் கண்ணீர் துளிகள் ஒவ்வொன்றும் மகனின் உயர்ச்சிப்படிகளாயின. பல்கலைக்கழகம் தெரி- வாகி ஒரு வைத்தியரானான் மேல் படிப்பிற்காக லண்டன் செல்வதென அவனுக்குத் தகவல் வரவே " அம்மா நான் ... நான் ... உங்களைப் பிரிஞ்சு இருக்கமாட்டேன் நான். போகலே அம்மா " என தாயிற் கொண்ட பற்றுதலால்

கண்ணீருடன் நின்றான். தன் சோகங்களை வெளியில் காட்டாது " இல்லை மகனே நீ போய் படிக்கணும் " எனக் கூறும்போது தாய் சொல்லைத் தட்டாதவனாய் அரை மனதுடன் சென்றான். அன்று சென்ற பிரதீப்பை எதிர்பார்த்த வதனா விழிநீர் சிந்துகிறாள். அப்போதுதொலைபேசி ஒலித்துக்கொண்டிருந்தது இவ்வளவு நேரமும் தான் மெய்மறந்து இருந்ததை அறிந்த வதனா அழைப்பினை எடுக்கிறாள் " அம்மா ... அம்மா நான் கொழும்பு வந்திட்டன் " மகன் ஆவலுடன் கூறுவதைக் கேட்டு " சரி பிரதீப் வை வை ... அம்மா உனக்குப்பிடிச்ச எல்லாம் செய்து வைத்திருக்கிறன் வேளைக்கு வந்நிடப்பா எனச் சந்தோச மிகுதியால் சொல்கிறாள் அதிகாலை விடிகிறது.

தன் வீடு நோக்கி ஆவலுடன் புறப்பட்டான் பிரதீப். மகனைக் கண்டதும் கண்களில் ஆறாக நீர் வழிய கட்டி அணைத்து முத்தமிட்டாள் வதனா. " அம்மா அம்மா உங்ட ஆசை எல்லாவற்றையும் நான் நிறைவேற்றி விட்டேன் உங்களுக்குச் சந்தோசம்தானே என அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறே கேட்கிறான் வார்த்தைகள் வெளிவராமல் ம் ... எனத் தலையசைக்கிறாள் வதனா. சில நாட்கள் கழிந்து ஆலய வழிபாட்டிற்காகச் செல்லும் வழி யில் சிவாவைக் காண்கிறாள் யாருமற்ற நிலை யில் கிழிந்த ஆடையுடன் சென்று கொண்டிருப்பதை அவள் விழிகள் காண மறுக்கவில்லை அவள் கண்களிலிருந்து கண்ணீர் விழுகிறது அது சிவாவை நினைத்தல்ல " என்று எனக்கு விடியல் என ஏங்கி அவளுக்கு நிம்மதியான விடியல் நிரந்தரமாய்க் கிடைத்ததற்கே.

சின்னத்தம்பி ஸ்ரீகுமார்,
வண்ணான்கேணி வடக்கு,
பளை,



# வேலாயுதன் சுரேந்திரனின் ஆளுமைகள்



இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கை மணித்திருநாட்டில் 06.02.1965 இல் வந்து அவதரித்தார், வே. சுரேந்திரன். பொருளாதார ரீதியில் ஆரோக்கியமான நிலையை அடைந்த இவர். சமுதாயத்தைச் சற்றுத் திரும்பிப்பார்க்கின்றபோது, அதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இனம் காண்பதுடன்,தன்னைச் சமூகப்பணியில் இணைத்துக்கொண்டார். இந்த இடத்தில்தான் வள்ளுவர் கூறிய ஒரு திருக்குறளை நினைவு கூரவேண்டியுள்ளது. " எச்சமென் றென்னெண்ணும் கொல்லோவொருவரான் நச்சப்படாஅதவன் "-அதாவதுஒருபொருளும் ஈந்து அறியாமையினால் ஒருவராலும் விரும்பப்படாதவன் தான் இறந்தபின் எஞ்சிநிற்பதாக எதனைக்கருதுவானோ? ஏனெனில், ஈகையில் அவன் ஈடுபட்டிருந்தால், அவன் இறந்த பின் ஏனையே-ார் அவன் புகழ் பாடுவர். புகழாவது எஞ்சியிருக்கும் ஆனால், ஈதலில் ஈடுபடாதவிடத்து ஒருவருக்கு அவன் புகழ் பாடான் வசையே விஞ்சி நிற்கும். வே. சுரேந்திரனின் கரங்கள் மேகத்தைப்போல் கொடை செய்து தேய்ந்துபோன கரங்கள் என்றுமே அவர் புகழ் இப்பூவுலகத்தில் நிலைத்திருக்கும்.


இன்றைய நவீன உலகில் அரசியல் அதிகாரம் உள்ளவர்கள் தங்களுடைய வ்யிற்றுப் பிழைப்பையே கவனிப்பதில் கண்ணும் கருத்துமாய் திகழ்கின்றனர். வே. சுரேந்திரன் எந்த அதிகாரமும் இல்லாமல் தான் உழைத்த பணத்தையோ, பொருளையோ பதுக்கி வைக்காமல் மக்கள் சேவையில் பயன்படுத்துவதில் அவருடைய மனம் ஆத்மதிருப்தி அடைகின்றது. வன்னிப்பிராந்தியத்தில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் இவர் செய்த சமூகப் பணிகள் ஏராளம். ஒரு நல்ல மனிதருக்கு சமூகத்தில் எதிரிகள் இருக்கமாட்டார்கள். ஆனாலும், சில விசமிகள் தானும் உதவி செய்யமாட்டார்கள்; செய்பவர்களையும் விடவும்மாட்டார்கள் இவ்விடத்தில்தான், வே. சுரேந்திரன் அவர்கள் சங்ககாலத்தில் தோற்றம் பெற்ற கலித்தொகையில் கூறுவன போல நடந்து கொள்கின்றார். " பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் ", " அறிவெனப்படுவது பேதையர் செல்நோன்றல் " என்ற வரிகளுக்கு உயிர்ப்பூட்டுகின்றார், வே. சுரேந்திரன்.

எல்லோரிடமும் இலகுவில் வாய்விட்டுச்சிரித்து கலகலப்பாகப்பேசும் இயல்புகொண்டவர். நான் என்ற மமதை, ஆணவமற்ற, உயர்ந்த உத்தம மனிதர் வே. சுரேந்திரன் இவ்விடத்தில் ஒரு பழமொழியைச் சுட்டிக்காட்ட வேண்டும் " இரும்பைக் காந்தம் இழுக்கும்; உத்தமரை நட்பு இழுக்கும் " - இதற்கு ஏற்ப இவரை வெறுக்கும் மனிதர்கள் இல்லையென்றே கூறவேண்டும் நீட்சண்ய பார்வை தூர நோக்கம் கொண்டு செயற்படும்....... ஆளுமையைக் கொண்டவர்.

ஔவைப்பிராட்டியார் குறிப்பிடுவதைப்போல இவர் தன்னுடைய யதார்த்த வாழ்வில் உண்மையாக வாழ்கின்றவர்

" அஞ்சாலும்மாயாது அறப்பொருள் இன்பமும்
துஞ்சாது அவர் துறக்கும் ஆறு " - ஐம்புலன்களின் வாதனையால் அழிந்து விடாமல் தங்களைக் காப்பாற்றிக்கொண்டு உயிர் வாழ்பவர்கள் மெய்யான அறம்,பொருள்,இன்பம் துய்த்து வாழ்வின் பயனை அடைவர். இக்கருத்துக்கு வரைவிலக்கணமாக வே. சுரேந்திரனைக் குறிப்பிடலாம்.

" நாம் மற்றவர்களைக் கவரவேண்டும் என்றால் எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். பிரச்சினைகளைப் பொருட்படுத்தாதீர்கள். பிறக்கும் போதே நம்மோடு கூடப்பிறந்தவை பிரச்சினைகள். பிரச்சினைகளோடுதான் நாம் வாழப்பழகிக்கொள்ளவேண்டும்



அதை நேசிக்கக் கற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம்" என தன்னிடம் வருபவர்களிடம் தத்துவார்த்தப்பண்புடன்பேசி அவர்களுக்கு ஆறுதல் கூறக்கூடியவர் வே. சுரேந்திரன்.

மக்களோடு மக்களாக வாழ்க்கை இணைந்து பயணிப்பவர்தான் இவர். அன்பான பொது மக்களே, நீங்கள் சற்று சிந்தித்துப்பாருங்கள் இந்த உலகத்தில் பிறந்தவர்கள் வாழ்வது சில காலம் அதிலும் சில மனிதர்களே, தனக்காக வாழாது பிறருக்காக வாழ்கின்றனர். அந்த வகையில் வே. சுரேந்திரன் தன்னென வாழாது பிறருக்காக வாழ்ந்தவர்; வாழ்ந்துகொண்டிருப்பவர் இதை நாம் அவர் செய்த சமூகப் பணிகளிலிருந்து காணலாம். அகில இலங்கை சமாதான நீதவான் வேலாயுதன் சுரேந்திரனின் நற்பணிமன்றத்தின் நோக்கங்கள் பல அவற்றில் சிலவற்றைச் இவ்விடத்தில் சுட்டிக்காட்டவேண்டிய கடப்பாடு உண்டு

**01.** சமுதாயத்தில் நலிவடைந்த, அந்நியப்பட்ட மனிதர்களை சமுதாய வாழ்வுடன் இணைத்தல்

**02.** வன்னிப்பிராந்தியத்தின் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பாகுபாடுகள் இன்றி அவரவர் பாரம்பரிய சம்பிரதாய மரபுகளைக் கட்டிக்காத்தல்.

**03.** ஈழத்தமிழர் தம் சுதேசியம், கலை, பண்பாடு முதலியவற்றை மீள் கட்டுமானத்திற்கு உட்படுத்தல்.

**04.** வறுமைக்கோட்டின்கீழ் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், வேலைவாய்ப்பற்ற இளைஞர் - யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல். முதியோர், பெண்கள், சிறுவர் போன்றோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

**05.** இனவாதமில்லாத இலங்கைத் தேசத்தைக் கட்டிக்காப்பதுடன் ஒவ்வொரு பிரஜையும் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு வழியமைத்துக்கொடுத்தல்.

அன்று தொடங்கி இன்று வரை இவரால் மேற்கொள்ளப்பட்ட பொதுப்பணிகள் ஏராளம் அவற்றுள் சிலவற்றை நாம் நோக்குவோம்.

♥ 2009- இல் ஸ்ரீநகர் முன்பள்ளிக்கு நிதியுதவி வழங்கியதுடன், ஸ்ரீநகர் சனசமூக நிலையத்திற்கு நீர்த்தொட்டியும் அமைத்துக்கொடுத்தார். பூந்தோட்டம் பாலர் பாடசாலையை நிறுவிக்கொடுத்தார். இதேகாலப்பகுதியில் தவசியாக்குளம், புதுக்குளம் பாடசாலைகளுக்கு நிதியுதவியும் வழங்கினார்.

♥ 06.08.2012 -இல் வவுனியா மாவட்டச் செயலகம் நடத்திய விளையாட்டுப்போட்டிக்கு கணிசமான அளவு நிதியுதவி வழங்கியுள்ளார்.

♥ 2008.2012- இல் யாழ் மாவட்ட ஆன்மிகப் பெருவிழாவுக்கு தன்னால் இயன்ற பொருள் மற்றும் பண உதவியைப் புரிந்துள்ளார்.

♥ 11.09.2012 -இல் சாந்தசோலை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய புனருத்தாரணத்திற்கு தன்னால் முடிந்தபங்களிப்பை அளித்துள்ளார்.

♥ 02.10.2012- இல் பூந்தோட்டம் ஸ்ரீ துர்க்கா விளையாட்டுக்கழகத்திற்கு குறிப்பிடத்தக்க நிதியுதவி கொடுத்துள்ளார்.

♥ 10.10.2012- இல் வவுனியா முருகன் ஆலயக்கிரிகைக்கு தனது உதவியை நல்கியுள்ளார்.

♥ 14.10.2012- இல் புதுக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின் கட்டட வேலைக்கு பண உதவியைச் செய்துள்ளார்

♥ 11.11.2012 -இல் சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலயத்திற்கு பண உதவி புரிந்துள்ளார்.

♥ 29.11.2012.- இல் நெளுக்குளம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தின் கட்டட நிதிக்கு உதவி நல்கினார்.

♥ 2012- இன் இறுதிக்காலப்பகுதியில் குட்செட் வீதி கருமாரியம்மன் ஆலயம், .றம்பைக்குளம் நாகபூசனி அம்மன் ஆலயம், சூசைப்பிள்ளையார் பத்திரகாளியம்மன் ஆலயம் போன்றவற்றிற்குபொருள் - பண உதவிகளை நல்கியுள்ளார்.

♥ 19.03.2013 -இல் எல்லப்பர் மருதங்குளம் விளையாட்டுக்கழகத்திற்குப் பண உதவி புரிந்துள்ளார்.

♥ 20.04.2013- இல் வைரவப்புளியங்குளம் சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்திற்குவிஜயம் செய்து அங்குள்ள குறைகளை நிறைவு செய்தார்.

♥ 20.05.2013- இல் யாழ்ப்பாணம் நாகபூசனி அம்மன் ஆலயத்திற்கும், வவுனியா பன்சால, மடுகல்ல பாலர் பாடசாலைக்கும், வவுனியா மரண அநுதாபச்சங்கம் போன்றவற்றிற்கு நிதியுதவி செய்தார்.

♥ 01.06.2013- இல் வவுனியாவில் ஐயப்பன் கோவில் அமைப்பதற்காக நிலப்பரப்பை வாங்கிக்கொடுத்தார்.

♥ 02.06.2013- இல் தாய்மொழிவளர்ச்சி மன்றத்தினால் வெளியிடப்படும் ஸ்ரீ-தர்சனம்( **புயலோசை** ) எனும் மாதாந்த சஞ்சிகையின் முகாமைத்துவ ஆலோசகராக இணைந்து கொண்டார்.

இவற்றோடு தரணிக்குளம் ஆலயம், முருகனூர் ஆலயம், கணேசபுரம் ஆலயம், ஸ்ரீ நகர் அம்மன் ஆலயம் என பல்வேறு வணக்கஸ்தலங்களுக்கு தன்னுடைய உதவியைச் செய்துள்ளார்: மக்களுடைய அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை நேரில் சென்று தீர்த்து வைக்கும் அபார சக்தி படைத்தவர் வே. சுரேந்திரன். கணேசபுரத்தில் ஓலை வீடுகளில் வாழும் மக்களுக்கு எதிர்காலத்தில் நிரந்தர வீடுகள அமைத்துக்கொடுப்பதாகக் கூறியுள்ளதுடன் தற்காலிகமாகக் கிடுகுகளையும் வழங்கியுள்ளார். பழைய மணிபுரத்தில் உள்ள காணி உறுதி அற்றவர்களுக்கு காணி உறுதியைப் பெற்றுத்தருவதாக கூறியுள்ளார். பாரதிபுரம் RDS இற்கு பெறுமதிமிக்க ஒலி பெருக்கியை வாங்கிக் கொடுத்துள்ளார். வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளையும் வாங்கிக் கொடுத்துள்ளார், மழைகால நிவாரண உதவிகள், மரண வீட்டு உதவிகள், பாடசாலை விளையாட்டுக்கான உதவிகள், ஊனமுற்றவர்களுக்கான உதவிகள், நீர் வசதி அற்ற கிராமத்திற்கு நீர் வசதியைப் பெற்றுக்கொடுத்தல், மதங்களுக்கிடையே இணக்கப்பாடடைப்பேணுதல் என இன்னோரன்ன சமூகப்பணிளை அகில இலங்கை சமாதான நீதவான் வேலாயுதன் சுரேந்திரன் நற்பணி மன்றத்தின் ஊடாக இவர் செய்து வருகின்றார்.




இவரது சமூகப் பணிக்காக நீதி அமைச்சு அகில இலங்கை சமாதான நீதவான் பதவியை வழங்கியது. 30.07.2013 இல் வவுனியா தாய்மொழி வளர்ச்சி மன்றம் சமூகசிற்பி எனும் கௌரவப்பட்டத்தை வழங்கியது.

சமூகப் பணியே செய்து தரணியில் வளர்ந்த உத்தமரே!, மக்கள் மனத்தில் கோயில் கொண்ட மாசில்லாத்தெய்வமே!, எங்கள் உள்ளங்களில் எந்நாளும் பதியும் வண்ணம் சமூகப்பணி புரிந்த உங்களை நாம் என்றும் மறவோம்.

மா. ஞானி ( வவுனியா )

## சொல்லிப்பாருங்கள்


- ஆங்கில மொழியில் எழுதப்படும் முதல் ஆறு வார்த்தைகள் :- the, of, and, to, a, in
- ஆங்கிலத்தில் பேசும் போது அதிகம் பயன்படுத்தப்படும் ஒரே வார்த்தை :- I
- ஆங்கிலத்தில் பெரும்பாலான வார்த்தைகளில் :- E எழுத்து இடம் பெறும்
- தமிழில் எழுதப்படும் அனைத்துக் கடிதங்களும் 'அ' என்ற எழுத்திலிருந்தே ஆரம்பமாகும்



# அறிவியல் பார்வை




## நானோ தொழிநுட்பம்



வருங்காலத்தில் மிகப்பெரும் ஒரு புரட்சியை ஏற்படுத்த காத்திருக்கும் ஒரு அதி உன்னத தொழில்நுட்பம்தான் நானோ தொழில்நுட்பம் என்ற குறுந்தொழில்நுட்பம். சிறிய பெரிய என்று பாகுபாடு இல்லாமல் அனைத்து தொழிற்துறைகளுக்குமான ஒரு சிறந்த தொழில்நுட்பம் என்று விஞ்ஞானிகளால் போற்றப்பட்டுக்கொண்டு இருக்கும் இந்த தொழில்நுட்பம் இன்னும் பெரும்பாலான நாடுகளில் சோதனைச்சாலைகளில் வளர்ந்து கொண்டு இருக்கிறது.

ஒருமீட்டரில் நூறு கோடியில் ஒரு பங்கு தான் நானோ மீட்டர் எனப்படுகிறது. இந்த மிக மிக சிறிய அளவை நம்மால் சாதரணமாக பார்க்கமுடியாது. எனவே இந்த தொழில்நுட்பங்களை கையாள இதற்கென வடிவமைக்கப்பட்ட பல்வேறு நுணுக்குக்காட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. உலகில் உள்ள ஒவ்வொரு பொருளின் அடிப்படை அலகு என்று வர்ணிக்கப்படுவது அணு. அந்த அணு அளவில் கையாளப்படும் இந்த நானோ தொழில்நுட்பத்தின் அடிப்படை செயல் ஆதாரம், அணு அளவிலேயே எந்த ஒரு செயலை செய்யவும், கட்டுப்படுத்தவும் முடியும் என்பதுதான். இத்தொழிநுட்பம் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பயன்படுத்தும் காலத்துடன் அதன் வினைத்திறன் அதிகரித்துச் செல்லும் இயல்பைக்கொண்டுள்ளது.

## 15 நிமிடத்தில் விண்வெளியை அடையும் விண்கலம்




லண்டன்: ஸ்கைலான், நிறுவனம் வெறும் 15 நிமிடங்களில் விண்வெளியை அடையும் ஒரு புரட்சிகரமான விண்கலத்தை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. ஒலியின் ஐந்து மடங்கு விட வேகம் வாய்ந்த இந்த விண்கலம் ஒரு மணி நேரத்திற்கு 30,577.5 கிமீ (19,000 மைல்கள்) வேகத்தில் பயணிக்கும். இந்த விண்கலத்தை தயாரிப்பதற்கு பிரிட்டன் அரசாங்கம் $ 60 மில்லியன் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளது. பிரிட்டிஷ் வடிவமைக்கப்பட்ட இந்த ராக்கெட் பொறிக்கு Sabre என்று பெயர் வைத்துள்ளனர். விமான இயந்திரங்கள் காற்றில் இருந்து ஒட்சிசன் மற்றும் திரவ ஐதரசன் இணைந்து 26 கி.மீ வேகத்தில் உயரமாக பறக்கும். நம்பகமான இலக்கை அடைவதற்கு Sabre முதல் இயந்திரமாக இது இருக்கும் என்று கூறுகின்றனர்.

## உலகில் பெரியவைகளில் சில



உலகின் மிக நீளமான பாலம் சீனாவின் Donghai Bridge தான் இதன் நீளம் சுமார் 32.5 km



உலகின் மிக பெரிய பயணிகள் விமானம் Airbus A380 தான். இதில் ஒரே நேரத்தில் சுமார் 555 பயணிகள் பயணிக்கலாம்




உகின் மிக உயரமான கட்டிடம் டுபாயில் உள்ள Burj Dubai தான். இதன் உயரம் சுமார் 900 மீட்டர்கள்.



உலகின்மிக அகலமானபாலம ஆஸ்திரேலியாவின் Sydney Harbour Bridge தான்.



உலகின்மிகபெரியபயணிகள் கப்பல் MS Freedom of the Seas தான் இதில் ஒரே நேரத்தில் சுமார் 4300 பயணிகள் பயணிக்கலாம்.



உலகின் மிக பெரிய மண் வெட்டும் இயந்திரம் (Excavator) ஜெர்மனியில் உள்ளது. இதன் எடை சுமார் 45,500 டன்கள், உயரம் 95 மீட்டர்கள் அகலம் 215 மீட்டர்கள்.

# சர்வதேச அரங்கில் பெண்கள்




பெண் என்பவள்பேணுபவள், பேணப்படுபவள். இதனாலேயே பெரியர் " மாதராய்ப் பிறப்பதற்கு நல்ல மாத தவம் செய்திடல் வேண்டும்" எனக்கூறினர். ஓர் ஆணின் வாழ்வில் மட்டுமன்றிகுடும்பத்தில் முக்கியபாத்திரமாக அங்கம் வகிப்பவள் பெண். ' தாயிற் சிறந்த கோயிலு மில்லை', 'தாயின் பின் தாரம்' என்ற கூற்றுக்கள் பெண்மையின் மேன்மையினை பறைசாற்றுகின்றன. பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து, உலகத்தையும் உறவையும் அறியவைத்த அன்னை ஒரு பெண். இவ்வாறு பெண் அன்றும் இன்றும் பெண் பெருமைக்குரிய இடத்தில் வைத்து எண்ணப்படுகிறாள்.

பெண்மை பற்றி புராண - இதிகாசங்களில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இராமயணம்,மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்ற பெருமை மிகு இலக்கியங்களில் மாதரின் மகிமையைத் தரிசிக்கலாம். இராமாயணத்தில் பதிவரதை சீதை, மகாபாரதத்தில் திரௌபதி, சிலப்பதிகாரத்தில் கற்புக்கரசி கண்ணகி போன்ற பெண்மணிகள் போற்றப்பட்டனர். இன்றும் தெய்வ நிலையில் கிராமப்புற மக்களினால் பெண் தெய்வங்களாகப் போற்றி வழிபடப்படுகின்றனர். கற்புக்கு இலக்கணமாக வாழ்ந்நதது மட்டுமன்றி, இன்றைய பெண்களுக்கும் முன்மாதிரியாக விளங்குகின்றனர். இதன் விளைவாக கற்புக்கடவுளாக மக்களால் கோயிலில் குடியமர்த்தப்பட்டு வழிபடும் இன்றைய நிலை.

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் பெண்கள் போகப்பொருளா? இல்லை பாரினை ஆளவல்லவளா? என்ற ஐயம் எழுகின்றது. ஒரு காலத்தில் கற்பு, கட்டுப்பாடு ஆணுக்கு அடிமையாக எண்ணுதல், இரண்டாமிடம் கொடுத்தல் என்ற தாழ்நிலையில் பெண்ணினம் வாழ்ந்தது. இதனை " ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று..." வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம்", விந்தை மனிதர் தலைகவிழ்தார்" என்ற பாரதியாரின் ஒரு சில பாடல் வரிகள் சான்று பகர்கின்றன. எனினும் அத்தகைய நிலை இன்று மாற்றம் கண்டுள்ளன. மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி', 'மாறுதல் ஒன்றே இவ்வுலகில் மாறாதது'- எனறவாசகங்களின் உண்மை உயிர்ப் பெற்றுவிட்டனவென்றேகூற வேண்டும்.

விக்டோரியா, கதரின், ஸ்ரீமாவோ, சந்திரிக்கா, இந்திராகாந்தி ஆகிய பெண்கள் அரசியல் தடம் பதித்து பிரதமமந்திரி, ஜனாதிபதி எனும் உயர்பதவிகளையும் பெற்று 'பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரிற் பெண்கள் நடத்த வந்தோம்'-என்ற பாரதியின் கவி வரிகளை யதார்த்தமக்கியுள்ளனர். அது மட்டுமன்றி மண்ணில் சாதனைபுரிந்து விண்ணிலும் சாதனைப்படைத்த பெண்கள் ஏராளம். வலன்ரீனா தெரஸ்கோவா, கல்பனா சாவ்லா ஆகியோர் இகற்கு சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றனர் 'இருபதாம் நுற்றாண்டின் பேரழகிகளில் ஒருவர்', 'உலகின் உயர்ந்த ரோஜா'- என வர்ணிக்கப்படும அன்னைதெரேசாவும் ஒரு பெண்மணி. சிறந்த சமூக சேவையை செய்து இன்றும்மக்கள்மத்தியில் அழியாபுகழோடுவாழ்ந்துகொண்டிருக்கிறார். இவர்கள் மட்டுமன்றிஜனசிராணி, லேடி நைற்றிங்கேல், கெலன் கெலர் போன்றோரும் சாதனையாளராக வலம் வந்தவர்களே.




நம்மத்தியில்



ஊடகவியலாளராக, பணிப்பெண்களாக, ஆட்டோசாரதிகளாக, அரசியல்வாதிகளாக, பாரிய இயந்திர இயக்குநராக பெண்கள் பவனிவந்தவண்ணமே உள்ளனர் இருந்தபோதிலும்தக்கபாதுகாப்பின்மையினால், இன்றும்பாலியல் வன்முக்கு, வரதட்சணைக் கொடுமைக்கும் உட்பட்டு பெண்ணினம் இன்னல் பட்டுவருகின்றது. இதனால் கல்வி, அரசியல் துறைகளில் மட்டுமன்றி தொழிலில்பதவி உயர்வும் சமூக அந்தஸ்தும் தடைப்படுகின்றது. 'பெண் விடுதலை' என்பது வெறும்வாய்வார்த்தையாகவே உள்ளதை ஒரு சிலவிடயங்கள் எம்மிடம் காட்டிக்கொடுத்து விடுகின்றன. எத்தகைய உயர்ந்த ஆளுமை, ஆற்றல் இருப்பினும் ஒரு பெண் குடும்பவாழ்வில்இணைந்துவிட்டால் குடும்ப பொறுப்பு, குழந்தை வளர்ப்பு என்பன அவள்மீது திணிக்கப்படுகின்றன. இதுவும் தூற்றகல்விகேற்ற பதவி, பதவியுயர்வு கிட்டாமல் செல்வதற்கு காரணமாகின்றது.

மேற்கூறிய பிரச்சினைகளைத் தாண்டியும் ஒரு சில பெண்கள் சாதனைப்படைக்கவே செய்கின்றன. பெண்கள் தினம், அடக்கு முறை மீறல்களுக்கான மாற்றங்கள், சாசனம் என்பன இந்தபோதிலும் பெண் இனம் இன்னல்களுக்கு முகம் கொடுத்தே வருகன்றது. ஆண்களுக்கு கல்வி, தொழில் ஆராய்ச்சி ,அரசியல் போன்றவற்றில் கூடுதலான பங்களிப்பு உள்ளனவே தவிர பெண்களுக்கு அத்தகைய பங்களிப்புகள் அருகியே உள்ளன. எனவே பெண் அடிமை ஒழிய வேண்டும். உலக அபிவிருத்திகளில் அவர்களனின் பங்களிப்பும் இடம் பெறும் வகையில், அடக்கு முறைகள் அழிய வேண்டும் சுதந்திரமாக சாதனை புரிய வழி செய்திடல் வேண்டும்.

சி. ரஞ்சிதா
கெக்கிராவ





கன்னி ஆத்துல மீன் பிடிக்கலாம் .... மகாலி ஆத்துல மீன் பிடிக்கலாம் .. ஆனா
ஐயர் ஆத்துல மீன் பிடிக்க முடியுமா ?

ரவி :- நீ திருமணத்திற்கு முதல் கும்பிட்ட கடவுள் எது?
கமல் :- முருகனப்பா
ரவி :- அப்ப திருமணத்திற்கு பிறகு?
கமல் :- கும்பிடாத கடவுளே இல்லயப்பா.


அபிராமி போட்டோ பிரதிச் சேவை


குறைந்த விலையில் தெளிவாக பிரதி எடுத்திடவும்
நகல்போல் இல்லாமல் அசல்போலவே இருக்கும் பிரதிகளைப் பெற உங்கள் தெரிவு.



அபிராமி போட்டோபிரதிச் சேவை,
இல:- 212,
ராமநாதன் வீதி,
யாழ்பல்கலைக்கழகம் முன்பாக,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தொ.பே :- 077-95781355

அறிவாலயம்



அனைத்து துறை சார் இலங்கை, இந்தியப் புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

Mrs. G. யாமினி
077 - 8010066

J. கோபிநாதன்
077 - 9834440

இல :- 190 பி. ஸ்ரேசன் றோட்,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.பே :- 021 - 2227070

# வட மாகாண சபைத் தேர்தல் அர்த்தமுள்ளதா, அரங்கேற்றமா?

தமிழர்களின் தனித்துவமான கலாசாரங்களும், பண்பாடுகளும் நீண்ட நாட்களாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதன் பாரம்பரியங்கள் அழிவடையாத வண்ணம் மன்னர் ஆட்சிக்ககாலம் தொட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான பன்னாட்டு அம்சங்களில் ஒரு சிலவற்றை அவ்வப்போது ஆ ங் கா க ங் கே

இன்றைய நிலையில் சூழலில் காணக்கூடியதா உள்ளது.

ஜனநாயக வழிமுறையில் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள நிலையில்தமிழர்கள் தங்களுக்குரிய தேசியத்துவத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பதில் அதிக ஆர்வமுடையவர்களாக உள்ளனர். தமிழ் மக்களின் கைவிட்டுப்போன கலாசாரங்களை மீண்டும் நிலை நிறுத்தும் முகமாகவும், அவர்களின் எதிர்கார்ப்புக்களை வர இருக்கும் வட மாகாண-சபைத் தேர்தல் எவ்வளவு நிறைவேற்றும் என்பது நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாய் உள்ளோம்.

நடைமுறையில் தற்காலிகமாக உள்ள மத்திய அரசாங்கம் கடந்த காலங்களில் நடத்திய தேர்தல்கள் யாவும் திட்டமிடப்பட்ட இராஜதந்திர உயர் மட்ட ஆலோசனைகளின் பிரகாரம் " காலமறிந்து காரியமாற்றவேண்டும் " என்பதற்கு ஆதாரம் வழங்குவதாகவே அமைந்திருந்தது என்பது சர்வசேம் அறிந்த உண்மையாகும். அதற்கு ஏற்றாற்போல் அண்மைக்காலங்களில் போர்முடிவின் துயரங்கள், பெரும்பான்மையினத்தவரின், தனிப்பட்ட ஒரு நிகழ்வுக்குக் காரணமாக அமைந்திருந்தது. மேலும் நடைமுறை விடயங்கள் அனைத்தும் அரசாங்கத்திற்கு சாதகமாகவே அமைந்திருந்ததுடன், அவ்வாறான நிகழ்வுகள் எல்லாம் ஜனாதிபதித் தேர்தல்கள் மற்றும் மாகாண-சபைத் தேர்தல்களில்பெரும்பான்மை ஆதரவுடன் தமக்குச் சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமைந்திருக்கிறது.

நீண்ட நாட்களாக நடைபெறாமலிருந்த வட மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதனூ

டாக வடக்கு மக்களின் அரசியல் செயற்பாடுகளைத் தூரிதப்படுத்துவதற்காக அரசு அறிவித்துள்ள நிலையில் தேர்தல்களுக்காகன ஏற்பாடுகளும் துரித கதியில் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன், அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள், என ஒவ்வொன்னும் தங்கள் சார்பில் வேட்பாளர்களை முன்னிலைப்படுத்துவது என்பதில் போட்டி போட்டுக்கொண்டு செயற்பட ஆரம்பித்துவிட்டன. வழக்கம்போல வடமாகாண சபைத் தேர்தலுக்கான தேர்தல் வியூகங்களை அரசாங்கம்" வகுத்து பட்டடியலிட்டு வைத்துள்ளது அதற்கான நிகழ்ச்சி நிரல் ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. இவ்வாறான சூழ் நிலையில் தமிழ் மக்களின் அடிப்படைத்தேவைகள் என்ன? அவர்களின் அரசியல் அபிலாசனைகள் என்ன? என்பது பற்றித் தெளிவாக விளங்கிக் கொண்டு அதற்கு ஏற்றாற்போல் தீர்வுகளைப் பெற என்ன வழிமுறைகளை கையாள முடியுமோ அவ்வாறான வழிமுறைகளையும், தந்திரோபாயங்களையும் பயன்படுத்தி தேர்தலில் களமிறங்கி தமிழர் தரப்பினர் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகளை பெற்றுவிடுவார்கள் தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும். வேட்பாளர்கள் என்கின்ற எதிர்பார்ப்புக்கள் சிவில் சமூகத்தினர் மத்தியில் ஆழமாக உருவாகியுள்ளது.

சிவில் சமூகத்தின் இந்த எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றும் முகமாக அரசியல் கட்சிகள் செயற்பாடுமா அல்லது குறுகிய கால அரசியல் சுய இலாபங்களுக்காக மாய வலையினுள் சிக்குண்டு தமிழர்களின் வாக்குப் பலத்தை சின்னாபின்னமாக்கி விடுமா? என்பது இன்று தமிழ் மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள உள ரீதியிலான அச்சமாகும்.



எப்படியோ நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஒரு மாகாணசபைத் தேர்தலை நாம் எதிர்கொள்ள தயாராகிவிட்டோம் விரும்பியோ விரும்பாமலோ தேர்தலில் வாக்களிக்க வேண்டியது கடமையாக உள்ளது.

அரசு வடமாகாணசபைத் தேர்தலில் எவ்வாறான அரசியல் வியூகங்களை வகுத்திருந்தாலும் தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களுக்கு ஏற்றாற்போல அவைகளையெல்லாம் முறியடித்து எதிர் கொள்ள வேண்டியது எம் தமிழ் தலைவர்களுடைய சாணக்கியத்திலேயே தங்கியுள்ளது. தமிழர்களின் பிரச்சினை என்கின்ற விடயத்தில் தீர்வு என்பது எட்டகூடிய அருகாமையிலிருப்பது போல இருந்தாலும் அதை நோக்கிப் போகும் போது கானல் நீர் போன்றுதான் உள்ளது. இதற்குக் கடந்தகால நிகழ்வுகள் எடுத்துக்காட்டாகவே அமையப் பெற்றுள்ளது. அரசியல் ரீதியில் தீர்வுகளை முன்வைத்து போராட ஆரம்பித்து சுமார் ஒரு நூற்றாண்டினைஅண்மித்துக்கொண்டிருக்கிறது எனலாம். ஆனால் தீர்க்கமான முடிவினை எட்டுவது என்பது இன்றுவரையிலும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது என்பது மட்டுமல்லாமல் ஏதும் ஒரு தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் விதமாக தமிழ் தரப்பினர் ஒருமித்து ஏகமானதாக தீர்மானங்களை எட்டுவதிலும் முன்னேற்றம் காணவில்லை என்றே கூறலாம்.

கடத்தகாலக்களில் தமிழ் மக்களிடையே ஒரு ஐக்கி உணர்வு ஏற்பட்டமையும், கட்சிகள் ஒழுங்கமைந்துள்ள வீதமும் அவை பின்பற்றுகின்ற கொள்கை வளிமுறைகளுமே ஐக்கிய உணர்வு இல்லை என்பதை பறை சாற்றி நிற்கின்றது. காலம் கடந்த தீர்வைப் பற்றி சிந்திப்பது என்பது எம்மவர்களிடையே பழகிப்போன விடயம்தான். இனப்பிரச்சினைக்குத் தீர்வுப்பொதியினை 1987 ஆம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையுடன் மாகாண சபையின் ஊடாக அதிகாரப் பரவலாக்கம் பற்றி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது ஆனால் அன்றைய சூழலில் அவை தமிழர்களுக்கான குறைந்தபட்ச தீர்வுத் திட்டம் என்றே விமர்சிக்கப்பட்டது. இன்று மாகாண சபையின் ஊடாக குறைந்தபட்ச அதிகாரப்ப பரவலாக்கத்தினையே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் தமிழ் தலைமைகள் ஆவலுடன் உள்ளன. இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுவதும் செல்லாக்காசாகிப்போவதும் மத்திய அரசின் அசியல் இராஜ தந்திரதட்டில்தான் தங்கியுள்ளது.

இவ்வாறான காலகட்டத்தில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காக குரல் கொடுக்கும் அரசியல் வாதிகள் அதனை பெற்றுகொடுப்பதில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதுடன் வினைத்திறனுடன் செயற்படும் பட்சத்தில் தீர்வு என்பது மேலும் இலகுவாகக் கிடைத்து விடும் என்பது பெரும்பாலானோரின் எதிர்பார்ப்புக்களாகும்.

மக்களின் எதிர்பார்ப்புக்களுக்குமாறாகஅரசியல் களத்தினை சுயலாப விளையாட்டாக மாற்றி



விடும் வகையில் செயற்படுவார்களாயின் தமிழர்களுக்கு விமோசனம் என்பது சற்றுக் கடினமானதாகவே அமைந்து விடும் என்பது அரசியல் விமர்சகர்களின் எதிர்பார்ப்பாகும். சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வட மாகாண சபை தேர்தல் என்பது சர்வதேசத்திற்கு ஜனநாயகத்தை வெளிப்படுத்துகின்றோம் என்பதற்காக அரங்கேற்றப்படும் நாடகமாக அமையப் போகின்றதா அல்லது அர்தமுள்ள வகையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற ஒன்றாக அமையப்போகின்றதா என்பது எம்மவர்களின் அரசியில் அரசியல் சாணக்கியத்தில்தான் தங்கியுள்ளது.

A.P. முகுந்தன்

# சினிமா - விளையாட்டு




## தலைவா படத்திற்கு யு சான்றிதழ்

விஜய் நடித்துள்ள தலைவா படம் 9 ஆந் திகதி வெளியாகியது. இதற்கிடையில் தலைவா படத்தை பார்த்த தணிக்கை குழுவினர் அதற்கு யுஏ சான்றிதழ் கொடுத்தனர். படத்தில் வன்முறை காட்சிகள் அதிகம் இருப்பதாக தணிக்கை குழு கூறியது. இதனால் தயாரிப்பாளர் சந்திரபிரகாஷ் ஜெயின் படத்தை மீள் பரிசிலனைக்கு அனுப்பினார். அவர்கள் படத்தை பார்த்து விட்டு யு சான்றிதழ் வழங்க ஒப்புக் கொண்டனர். ஆனாலும் ஒரு சில காட்சிளை நீக்க வேண்டும். சில காட்சிகளின் நீளத்தை குறைக்க வேண்டும் என்றனர்.

இதனை தயாரிப்பாளர் ஒப்புக் கொண்டார். இதைத் தொடர்ந்து படத்துக்கு தணிக்கை குழு யு சான்றிதழ் வழங்கி உள்ளது.

## ஜெய்ஹிந்த் 2 படத்திற்காக ரூ.25 லட்சத்தில் போடப்பட்ட சிறைச்சாலை



அர்ஜுன் இயக்கி, நடித்த ஜெய்ஹிந்த படம் மாபெரும் வெற்றிப் பெற்ற படமாகும். இப்படத்தில் இடம்பெற்ற ஆக்ஷனாகட்டும், அதே சமயம் செந்தில் - கவுண்டமணியின் கனவு காமெடியாக இருக்கட்டும் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. தற்போது இப்படத்தின் இரண்டாம் பாகத்தை ஜெய்ஹிந்த் 2, என்ற தலைப்பில் அர்ஜுன் இயக்கி, தயாரித்து நடித்து வருகிறார். இப்படம் பற்றி கூறிய அர்ஜுன், படத்தின் படப்பிடிப்பை மைசூரில் துவங்கினோம் இரண்டு ஏக்கர் நிலத்தில் 25 லட்சம் ரூபாய் செலவில் சிறைச்சாலை அரங்கை அமைத்தோம் அதில் ராகுல்தேவுடன் நான் மோதும் சண்டை மற்றும் ரவிகாளேயுடன் மோதும் சண்டை காட்சிகள் மற்றும் முக்கியமான கட்சிகளை படமாக்கினோம்.



## அமெரிக்க வீராங்கனை மிஸ்ஸி ஃபிராங்ளின் சாதனை

உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில், 6 தங்கப் பதக்கங்களை வென்று, உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 6 தங்கப் பதக்கங்களை வென்ற முதல் பெண் வீரர் என்ற சாதனை-யை அமெரிக்க வீராங்கனை மிஸ்ஸி ஃபிராங்ளின் படைத்தார்.

ஸ்பெயினின் பார்சிலோனாவில் உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இவர், 100 மற்றும் 200m பேக்ஸ்ட்ரோக், 200m ஃப்ரீஸ்டைல், 4.100 மற்றும் 4.200m தொடர் ஃப்ரீஸ்டைல் மற்றும் 4.100 மெட்லே பிரிவுகளில் தங்கப் பதக்கம் வென்றார். 18 வயது நிரம்பிய ஃபிராங்க்ளின், இப்போட்டியில் கலந்து கொண்ட 8 பிரிவுகளில் 6-ல் தங்கப்பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



## உலகக் கோப்பை கால்பந்தின் வரலாறு

உலகம் முழுவதும் பல கோடி ரசிகர்களைக் கொண்டுள்ள ஒரே விளையாட்டு கால்பந்து மட்டுமே. கால்பந்துக்கு ரசிகர்கள் இல்லாத நாடே இல்லை என்று கூறும் அளவுக்கு மிகத் தீவிரமான ரசிகர்களைக் கொண்ட ஒரே விளையாட்டும் கால்பந்து மட்டுமே. உலகக் கோப்பைப் போட்டிகள் வந்ததே ஒரு பெரிய வரலாறாகும். 1928ம் ஆண்டு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (FIFA) தலைவராக இருந்தவரான ஜூல்ஸ் ரிமெட், சர்வதேச அளவில் ஒரு கால்பந்துத் தொடரை நடத்த திட்டமிட்டார்.

வரலாறு தொ




## முகப்பருக்கள் மறைய




பொதுவாக முகப்பருக்கள் எண்ணெய்ப்பதார்த்தங்களை உண்பதால் ஏற்படுகின்றது மேலும் உடலில் உள்ள கொழுப்புப் பொருட்கள், மறுக்கம், மலச்சிக்கல், உணவு முறை மாறுதல், போன்றவற்றால்முகப்பருக்கள்தோன்றுகின்றன.

முகப்பருக்கள் மறைந்து முகம் பொலிவு பெறுவதற்கு முட்டையின் வெள்ளை கருவினை எடுத்து அதில் அரை தேக்கரண்டி பயிற்றமாவினைக் கலந்து முகத்தில் தடவவும். காய்ந்த பின் முகத்தைப் பாலினால் கழுவி பின் நீரால் சுத்தம் செய்யவும். இவ்வாறு வாரம் இரண்டு தடவை செய்து வந்தால் பருக்கள் மறையும்.



## முடி உதிர்வதை தடுக்க



வேப்பிலை ஒரு பிடி எடுத்து நீரில் வேக வைத்து ஒரு நாள் கழித்து அந்த நீரினால் தலைகழுவி வந்தால் முடிகொட்டுவது இல்லாமல் போகும்.

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் என்பவற்றில் மாவினை கலந்து இரவில் தண்ணீரில்காய்ச்சி ஊறவைத்து காலை யில் எலுமிச்சைபழச் சாற்றுடன் கலந்து தலையில்தேய்த்து குளித்து வர முடி உதிர்வது நின்று விடும்

## சாம்பார் வைப்பது எப்படி?



தேவையான பொருட்கள் :

துவரம்பருப்பு - 200 கிராம் (4பேருக்கு)
தக்காளி - 3
வெங்காயம் - 2 பெரியது அல்லது 8 சிறியது
புளி - எலுமிச்சம்பழம் அளவுயுயுயு
சக்தி மசாலா சாம்பார் பொடி - 4 ஸ்பூன்
கடுகு, உளுந்தம்பருப்பு - 1&2 ஸ்பூன்
எண்ணெய், உப்பு, கருவேப்பிலை, கொத்தமல்லி - தேவையான அளவு

செய்முறை :

1. முதலில் பருப்பைக் கழுவி குக்கர் அல்லது பாத்திரத்தில் நன்கு வேகவைக்கவும்.
2. பருப்பு வேகும் நேரத்தில் புளியை ஒரு சிறிய பாத்திரத்தில் ஊறவைத்துக் கரைத்துக் கொள்ளவும். வெங்காயம், தக்காளியை நறுக்கிக் கொள்ளவும்.
3. பின்னர் சட்டியை அடுப்பில் வைத்து நான்கு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுந்தம்பருப்பு, கருவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். பின்னர் அதில் வெங்காயத்தைப் போட்டு வதக்கவும். நன்கு வதங்கியதும் நறுக்கிய தக்காளியைப் போட்டு மீண்டும் வதக்கவும்.
4. தக்காளி நன்கு வதங்கியதும் அதில் சக்தி சாம்பார் பொடியைப் போட்டு மறுபடியும் வதக்கவும். தேவையெனில் கொஞ்சம் எண்ணெய் சேர்த்துக் கொள்ளலாம்.
5. இப்போது அடுப்பில் தீயைக் குறைத்து வைத்துவிட்டு வேகவைத்த பருப்பையும், புளிக்கரைசலையும்வாணலியில் ஊற்றவும். பின்னர் தேவையான தண்ணீர் சேர்க்கவும்.
6. பின்னர் தேவையான அளவு உப்பைச் சேர்த்து நன்கு கொதிக்கவிடவும்.பின்னர் பரிமாறலாம்.

## உப்புமா கிண்டுவது எப்படி?



தேவையானவை :

- ரவை - 1 சிறிய டம்ளர் (1 ஆளுக்கு)
- பெரிய வெங்காயம் - 1ல் பாதி
- மிளகாய் - 2
- கடுகு, கறிவேப்பிலை, உப்பு - கொஞ்சம்

செய்முறை :

1. ரவையை சட்டியில் போட்டு கொஞ்சம் பொன்னிறமாக வரும்படி நன்றாக வறுத்துக் கொள்ளவும்.
2. வெங்காயம், மிளகாயை நறுக்கிக் கொள்ளவும்.
3. சட்டியில்எண்ணெய்ஊற்றிகடுகு, வெங்காயம், மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ளவும்.
4. வதக்கிய வெங்காயத்துடன் 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து லேசாகக் கொதிக்க விடவும். அப்படியே உப்பையும் சேர்த்துக் கொள்ளவும்.
5. பின் வறுத்த ரவையை அதில் சேர்த்து, விடாமல் கிண்டவும். பின்னர் பரிமாறலாம்



# கவிதை அரங்கம்



## சூரியன்



எம் தேசத்தி சூரியனே...!
எல்லோருடைய தேகத்திற்கும் உயிரூட்டுபவனே...!
இளைதம் பாராமல் ஐக்கியமாக வலம் வருபவனே...!
உன் ஒளியினால், பயிர்கள் தளிர்க்கின்றனவே.

உதயத்திலும அஸ்தமனத்திலும் வாழ்வின்
அர்த்தங்கள் சொல்லிவிடும் சூரியனே...!
ஒவ்வொரு நாளும் புதுப்புது அர்த்தத்துடன் தோன்றுபவனே...!
நாளை உன் நாமம் பாரெல்லாம் படரும்.

முல்லையில உன் கதிர்க்கரங்கள் முத்தமிடுகின்றன.
மருதத்தில் உன் கதிர்த்தீபங்கள் மனோதர்மம் காக்கின்றன.
நெய்தலில் உன் கதிர் அலைகள் நீந்தி விளையாடுகின்றன.
குறிஞ்சியில் உன் கதிர்மலைகள் அருவியில் நீந்துகின்றன.
பாலையில் உன் கதிர்கற்கள் தெறிக்கின்றன.

ஐந் நில நாயகன் சூரியனே...!
ஐம் பூதங்களிலும் பவனி வரும் எம் தேசத்தின் நாதமே...!
பைந்தமிழுக்கும் செந்நெல்லுக்கும் காவலன் நீயே...!
எம் இனத்தை ஒருகுலமாக்கும் தலைவன் நீயே...

(புயல்)

## சிறுவர் உரிமைக்காக




பயந்து பயந்து வாழ்கின்றனர்
படிப்பின்றிப்போகின்றார்கள்
பலமின்றி இருக்கிறார்கள்
பாரினில்அடிமையாய்வாழ்கின்றார்கள்

இருட்டறையில் வாழ்கிறார்கள்
இதயக்கண்ணீரில் நனைகின்றார்கள்
துன்பக்கில் துகள்கின்றார்கள்
துயரத்தில் துடிக்கிறார்கள்

பலவினத்தை அகற்றுங்கள்
பாரில் உயரவே
சிறுவர் உரிமைக்காக
புறப்படுங்கள்



ஸ்ரீ.ஸ்ரீவித்தியா,
சேமமடு,
வவுனியா.



## கீர்த்தி

திசை மாறிப்போன வாழ்விற்கு
அர்த்தத்தோடு தேடும் மருந்து

மாலதி,
மன்னார்.

## தேர்தல்



வாழ்வில் தேர்ச்சியற்றவர்கள்
தேடித் திரியும்
அர்தமற்ற தேர்வு

வாசு,
முல்லைத்தீவு.

## போலி




சந்தர்ப்பத்திற்கேற்றவாறு
சாய்ந்தாடும்
சரீரமற்ற மனிதன்

வி. நிலா,
கிளிநொச்சி.

## உறக்கம்

எதிர்கால மரண ஊர்வலத்தின்
ஒத்திகை

எ. வரதன்,
யாழ்ப்பாணம்.






## காகத்தின் புத்தி சாதுரியம்



ஒரு ஊரில் பாட்டி ஒருத்தி வடை சுட்டு விற்று வந்தாள். ஒரு நாள் அவ்வழியாக பறந்து வந்த காக்கா ஒன்று ஒரு வடையை தூக்கிக்கொண்டு பறந்து போய் மரக்கிளை ஒன்றில் உட்கார்ந்து கொண்டது. அந்த வழியாக வந்த நரி, வடையோடு காக்காவை பார்த்துவிட்டது வடையைத் தான் எடுத்துக்கொள்ள ஒரு தந்திரம் செய்தது. காக்காவைப் பார்த்து காக்கா, நீ மிகவும் அழகாக இருக்கிறாய். உனக்கு குரலும் கூட அழகாக இருக்கக்கூடும், ஒரு பாட்டுப் பாடு என்றது.

வடையைக் காலில் வைத்தபடி பாட்டுப் பாடியது ...காகம் ஏமாறவில்லை.! நரி கேட்டது...அழகாகப் பாட்டுப்பாடினாய் இனி ஒரு நடனம் ஆடு என்றது நரி. காகம் மீண்டும் வடையை வாயில் வைத்துக் கொண்டு நடனம் ஆடியது. நரி மீண்டும் ஏமாந்தது. நரி யோசித்துவிட்டு....பாட்டும் பாடினாய்..ஆடியும் காட்டினாய், அற்புதம்...இனி ஆடலுடன் பாடலும் பாடி...ஒரு நாடகம் நடி பார்க்கலாம் என்று கேட்டது. காகம் மீண்டும் வடையைக் காலில் வைத்துக் கொண்டு,,நான் பாடினேன் ஆடினேன்...நாடகம் நடிப்பதற்கு சக்தி வேண்டும் இந்த வடையை சாப்பிட்ட பின்னர் நடித்துக் காட்டுகிறேன் நண்பனே என்றது. நரி மீண்டும் ஏமாறியது.

### இம் மாத சர்வதேச தினங்கள்

**09 – ஆதிவாசிகள் தினம்**
**12 – இளைஞர் தினம்**
**13 – இடது கைப்பழக்கம் உடைவர் தினம்**
**19 – மனித நேய தினம்**
**21 – உலக நாணய தினம்**

### நிறங்கள் (COLOURS)

| | | |
|---|---|---|
| 01. Black | - | கறுப்பு |
| 02. Blue | - | நீலம் |
| 03. Brown | - | பழுப்பு |
| 04. Gream | - | வெளிர்மஞ்சள் |
| 05. Grey | - | சாம்பல் |
| 06. Green | - | பச்சை |
| 07. Orange | - | செம்மஞ்சள் |
| 08. Ping | - | இளஞ்சிவப்பு |
| 09. Purple | - | ஊதா |
| 10. Red | - | சிவப்பு |
| 11. white | - | வெள்ளை |
| 12. Yellow | - | மஞ்சள் |

### விடுகதைகள்

1. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?
2. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?
3. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன், பள்ளநீரைக் கண்டு பதைபதைக்கிறான். அது என்ன?
4. கலர்ப்பூ கொண்டைக்காரி, காலையில் எழுப்பிவிடுவாள். அது என்ன?
5. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?
6. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?
7. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு. வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன?
8. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை. அது என்ன?
9. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?
10. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்?

**இத் தாளிலேயே விடையை எழுதி வெட்டி அனுப்பவும்**

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**

பொறுப்பாசிரியர்,
கலைமருவிப்புயல்,
இல :- 45,
பாந்குழி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

# சகுனங்கள்

ஏதாவது ஒரு காரியத்தைமுன்னிட்டு வெளியில் புறப்படும் போது எதிரே வரும் சகுனங்களைக்கொண்டுகாரிய வெற்றி உண்டாகும், உண்டாகாது எனறு அறியலாம். சுபசகுனமானால் புறப்பட்டுச் செல்லலாம். அபசகுனமானால், அப்போது நின்று விட்டு வேறுசமயம் செல்லலாம்.







ஞா. வசந்தச்சலன்
வ/மாதர் பணிக்கர் மகிழங்குளம் க. உ. வி

# சினிமா...

சினிமாவை எல்லோருக்கும் தெரியும். ஆனால் சினிமாவைப் பற்றி எல்லோருக்கும் தெரியாது. அது நமக்கு கிடைத்திருக்கக்கூடிய மிக வலிமையான தொடர்பாடல் ஊடகம். மற்ற எந்த இலத்திரனியல் ஊடகத்தையும் விட சக்தி வாய்ந்தது. அது மிகச் சிறந்த பொழுதுபோக்கி மட்டுமல்ல் வெகுசன அபிப்பிராயங்களை உருவாக்ககூடிய அல்லது திணிக்கக்கூடிய ஒரு ஊடகம். அதன் வீச்சினை அல்லது அதன் மூலம் பெறக்கூடிய நன்மையின் அளவ-ினை நாம் குறைத்துத்தான் மதிப்பிட்டிருக்கிறோம்.

மற்றக் கலைகளை விட சினிமா மனிதனின் அனைத்து புலன்களையும் தூண்டி ஒரு செய்தியின் தாக்கத்தினை முழுமையான அளவில் உணர வைக்கும். நிஜ வாழ்வில் கூட உணரத்தவறும் சில உணர்வுகளை சிறப்பாக உணரவைப்பதில் சினிமா கைதேர்ந்தது. ஒரு சோகமான தருணத்தில் யாரும் நம் பின்னால் நின்றுகொண்டு சோக கீதம் படிப்பதில்லை. காதலை காதலி ஏற்றுக் கொள்ளும்போது லாலாலா... கோரசுடன் பட்டாம்பூச்சிகள் பறப்பதில்லை. இருட்டில் தனியே வீடு திரும்பும்போது எதுவித பயங்கர பின்னணி இசை ஒலிப்பதில்லை.

எந்த ஒரு சிறப்பான கதையிலும் காட்சி விபரிப்பு அவ்வளவு சிறப்பாக முழுமையாக வாசகனை சென்றடைவதில்லை. ஒரு எழுத்தாளனின் கதையில் வரும் மாந்தர்களினை சூழலை அல்லது பின்னணியை வாசகன் தான் இதுவரை பெற்ற அறிவு மற்றும் அனுபவத்தின் ஊடாகவே கற்பனை செய்துகொள்கிறான். எழுத்தாளனின் மொழி நடை, சொற்கள் ஆகியன வாசகனுக்கு புரியாமல் போகலாம்.

தொர்ச்சி 22 ஆம் பகக்ம்

## கிளிநொச்சியில் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பாதிப்பு

வெளி மாவட்ட மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளியைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு வந்து கல்வி கற்று பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகம் புகுவதால் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் இதற்கு தடை விதிக்குமாறு கோரியும் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்படும் மாணவர்கள் சார்பாக சில மாணவர்களுடன் இணைந்துள்ள ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இலங்கையிலேயே பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிப்பதற்காக குறைந்தளவான வெட்டுப்புள்ளி கிளிநொச்சி மாவட்டத்திற்கே வழங்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை தாங்கள் பயன்படுத்திக்கொள்வதற்காக பிற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் போட்டிபோட்டுக்கொண்டு கிளிநொச்சிக்கு வந்து உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இதனால், பல வருடங்களாக, யுத்த காலத்திலும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிய நிலையில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற கிளிநொச்சியைப் பூர்வீகமாகக் கொண்ட மாணவர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இந்தச் செயற்பாட்டைத் தடுத்த நிறுத்த தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கோரியே மேற்படி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்குமாறு சட்ட மாணவர்கள் உண்ணாவிரதம்



இலங்கையில் நடைபெற இருக்கும் கொமன்வெல்த் கூட்டம் வேறு நாட்டுக்கு மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இலங்கையில் நடைபெற்றால் கூட்டத்தில் பங்கேற்காமல் இந்தியா புறக்கணிக்க வேண்டும். என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 6 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சினிமா...

ஆனால் சினிமாவில் இயக்குனர் தான் உணர்ந்ததை அல்லது காட்ட விரும்புவதை கிட்டத்தட்ட முழுமையாக உணர்த்திவிடலாம்.

அத்துடன் தற்போதைய விஞ்ஞான தொழிநுட்பத்தின் மூலம் தகவலை உணர்த்தும் கலைக்கு வரையறைகளே இல்லாமல் போய்விட்டது எனலாம். நீங்கள் எதை வேண்டுமானாலும் பார்க்கலாம். மனித உணர்வுகளின் நுணுக்கங்கள்,ஆவிகளின் நடமாட்டங்கள், மந்திரவாதிகளின் மந்திரக்கோல்கள், மற்றவரின் கனவுகள்,விண்வெளியில் வாழும் வேற்றுக்கிரகவாசிகள் இன்னும் சொல்லப்போனால் இறந்த காலம், எதிர்காலம் என அனைத்தையுமே காணலாம். கற்பனைகளை காட்சிகளாய் காணமுடிவது சினிமாவில்தான்.

ஆனால் இங்கே சினிமா என்றால் கிட்டத்தட்ட ஒரு கெட்ட சொல் போல பார்க்கப்படுகிறது. நான் கத்தியும் சினிமாவும் ஒன்றென்பேன். அதை நீங்கள் எப்படி பயன்படுத்துகிறீர்கள் என்பதில்தான் அது நல்லதா கெட்டதா என்பது அடங்கியிருக்கிறது. ஓர் ஆளைக் குத்தி கொலையும் செய்யலாம் அல்லது அந்தாலயுக்கு மரக்கறி வெட்டி சமையலும் செய்யலாம். சினிமாவில் இரண்டு பகுதியினர் உள்ளனர். சினிமா தயாரிப்பவர்கள் மற்றும் சினிமா பார்ப்பவர்கள். இவ்விருவரின் செயற்பாடும் சரி யாக இருக்கவேண்டும். முதலாமவர்கள் சினிமாவை காசு சம்பாதிக்கும் தொழிலாக பாவிக்க நினைத்தால் நீலப்படம் எடுக்கலாம். இரண்டாமவர்கள் சினிமா தரும் கற்பனை உலகிலேயே லயித்து நிஜ உலகை மறந்து அல்லது அதனை கெடுத்துக் கொண்டு வாழலாம். இந்த இரண்டு பேரின் மனிதப் பலவீனத்தினால் உண்டான தவறுகளுக்காக எடிசன் கண்டுபிடித்த விஞ்ஞான அற்புதத்தை குறை சொன்னால் எப்படி?

சரி, சினிமா எப்படி இவ்வளவு பேரை கவர்கின்றது? மனிதன் ஒரு கதை விரும்பி. மனிதன் பூமியில் பிறந்தது முதல் கதை சொல்வதிலும் கேட்பதிலும் அவனுக்கு ஈடுபாடு அதிகம்.உரை அல்லது கட்டுரை வடிவம்வருவதற்கு முன்பு கதைகள் மூலமே மக்களுக்கு ஒழுக்கங்கள் கற்பிக்கப்பட்டன.கதைகள் சொல்லியே இறைதூதர்கள் மதங்களை உருவாக்கினார்கள். அதற்கு கிறிஸ்தவ மதத்தின் ஸ்தாபகர் சரியான உதாரணம். கதையின் பிரமாண்ட வடிவங்களே புராணங்கள், காப்பியங்கள் போன்றன. எவனும் அறிவுரை சொன்னால் கேட்கமாட்டான். கதை சொன்னால் இருந்து கேட்பான். அதனால் கதைகள் ஊடாக அறிவுரை சொன்னார்கள்.

தொடரும்...

# கல்வி தர்சனம்

EDUCATION

தமிழ் மொழியும் இலக்கியமும் | ஆசிரியர் :- டெ. ஸ்ரீ | தரம் :- 10, 11 இலக்கணப்பகுதி

## தொழில்முறைக் கடிதத்தின் அமைப்பு

**உமது கிராமத்தில் சிரமதானப்பணியை மேற்கொள்வதற்கு கிராமசேவகரிடம் அனுமதி கேட்டு ஒரு கடிதம் எழுதுக.**

த. தும்பன்,<br>
இல :- 09,<br>
கண்டி வீதி,<br>
வவுனியா.<br>
20.08.2013. → அனுப்புநர் முகவரி ( 4 புள்ளிகள் )

கிராம சேவையாளர்,<br>
தாண்டிக்குளம்,<br>
வவுனியா. → பெறுநர் முகவரி ( 3புள்ளிகள் )

ஐயா, → விளிப்பு (2புள்ளிகள் )

சிரமதானம் தொடர்பான விடயம் → தலைப்பு ( 2புள்ளிகள் )

..........................................................................................<br>
..........................................................................................<br>
..........................................................................................<br>
..........................................................................................<br>
.......................................................................................... → விடயம் ( 2 புள்ளிகள்)

இங்ஙனம், → முடிப்பு (1புள்ளிகள் )<br>
கிராமவாசி,<br>
த.துமபன் → ஒப்பம் (1புள்ளிகள் )

( மொத்த புள்ளிகள் = 4++3+2+2+2+1+1=15 )

குறிப்பு :- சரியான நிறுத்தற்குறிகள் இல்லாவிடின் எந்த விதமான புள்ளிகளுமில்லை

# உறவு முறைக் கடிதத்தின் அமைப்பு

உமது நண்பனின் நலனை விசாரித்து ஒரு கடிதம் வரைக

த. தும்பன்,
இல :- 09,
கண்டி வீதி,
வவுனியா.
20.08.2013. → அனுப்புநர் முகவரி ( 4 புள்ளிகள் )

அன்புள்ள, விளிப்பு (3 புள்ளிகள் )

.......................................................................
.......................................................................
....................................................................... → விடயம் ( 4 புள்ளிகள்)
.......................................................................
.......................................................................

இப்படிக்கு,→ முடிப்பு (2 புள்ளிகள் )
அன்புள்ள நண்பன் ,
த.துமபன் → ஒப்பம் ( 2 புள்ளிகள் )

( மொத்த புள்ளிகள் = 4++3+4+2+2 = 15 )

குறிப்பு :- சரியான நிறுத்தற்குறிகள் இல்லாவிடின் எந்த விதமான புள்ளிகளும் இல்லை.

| | |
|---|---|
| தொழில் முறைக் கடிதம் | உறவுமுறைக் கடிதம் |
| பெறுநர் முகவரி உண்டு | இல்லை |
| தலைப்பு உண்டு | இல்லை |
| முடிப்பு - இங்ஙனம் | முடிப்பு - இப்படிக்கு |
| விடங்கள் - 07 | விடயங்கள் - 05 |
| விளிப்பு - மரியாதை | விளிப்பு - அன்பு |

குறிப்பு :- கடிதத்தில் மின்னியல் கடிதம் என்ற வகையும் உண்டு.

# பந்தியமைத்தல்

## பந்தியின் பண்புகள்

01. தலைமைக் கருத்தைக்கொண்டிருத்தல்
02. தலைமைக் கருத்து சந்தேகத்திற்கு இடமில்லாது இருத்தல்
03. வாசகர்கள் கேட்கக்கூடிய வினாக்களுக்கு விடை தருவதாக இருத்தல்

## பந்தியில் தவிர்க்கப்படவேண்டிய விடயங்கள்

01. கூறியது கூறல் :- ஒரு விடயத்தினை திரும்பத்திரும்ப எழுதல் கூடாது
02. மிகைப்படக்கூறல் :- ஒரு விடயத்தினை அளவுக்கு அதிகமாக விபரித்தல் கூடாது
03. முன்னுக்குப்பின் முரணாகக் கூறல் :- முன்னர் ஒரு விடயத்தைக் கூறி பின்னர் மற்றொரு விடயத்தினை முன்வைத்தல் கூடாது
04. தேவைக்கேற்ற அளவு ஒரு பொருள் பற்றிக் கூறாது விடுதல் :- தேவையேற்படின் ஒரு பொருள் பற்றிக் கூறாது விடுதல்.
05. சொல்ல வந்த பொருளை விடுத்து வேறொரு பொருளைக் கூறுதல்

## பேச்சுத் தமிழ்

ஒரு மொழியின் இரு வேறுபட்ட வடிவங்களே பேச்சு மொழியும், எழுத்து மொழியும் ஆகும். எழுத்து மொழியை விட பேச்சு மொழியே வலிமையும், உயிர்ப்பும் உடையது, என்று மொழியியலாளர்கள் கூறுவர்.

உரையாடல், நாடகம், நாவல், சிறுகதை, போன்றன பேச்சு மொழியிலேயே இன்று எழுதப்படுகின்றன.

### பேச்சு மொழி ( தமிழ் )

- பிரதேசம் ( Regional )
  - இலங்கை
    - யாழ்பாணம்
    - மட்டக்களப்பு
    - மலையகம்
  - இந்தியா
    - சென்னை
    - திருநெல்வேலி
    - தஞ்சாவூர்
- சமூகம் ( Social )
  - பிரமணர்
  - பிராமணர் அல்லாதவர்
  - முஸ்லீம்
  - கிறிஸ்தவர்
  - மீனவர்

பேராசிரியர் நு.்.மான் பேச்சு மொழியினை மேற் கூறிவாறு இரண்டாகப் பிரித்துள்ளார்

### வடக்குப்பிரதேசக் கிளைமொழி

| **பிரதேச வழக்கு** | | **பொதுவழக்கு** | **பிரதேச வழக்கு** | | **பொதுவழக்கு** |
|---|---|---|---|---|---|
| காத்து | - | காற்று | முத்தம் | - | முற்றம் |
| மாத்து | - | மாற்று | குத்தம் | - | குற்றம் |


விஞ்ஞானம்

# கட்டுரை வினாக்கள்

தரம் :- 10, 11

ஆசிரியர் :- மோகன்.V

## உயிரியல் வினா





01. உருவில் மனிதனின் இதயத்தின் நெடுக்கு வெட்டுமுகம் தரப்பட்டுள்ளது.

A.
(1) உருவில்உள்ள ஆங்கில எழுத்துக்களால் காட்டப்படும் பகுதியை இனம் கண்டு எழுதுக
(2) A, B என்பவற்றின் தொழிலினைக் குறிப்பிடுக
(3) வலது இதயவறைச் சுவரை விட இடது இதயவறையின் சுவர் தடிப்பாக இருப்பதற்கான காரணத்தை விளக்குக
(4) இதய ஒலி ' லப் ' ' டப் ' ஆகும் இவ் ஒலி உண்டாகும் விதத்தைக் குறிப்பிடுக
(5) C இல் உள்ள குருதிக்கும், B இல் உள்ள குருதிக்கும் இடையிலான பிரதான வேறுபாடு ஒன்று தருக

B. (1) இதயத்திற்குக் குருதியை வழங்கும் கலம் எது?
(2) ஒருவருக்கு மாரடைப்பு நோய் எவ்வவாறு உண்டகிறது?
(3) குருதிக்குழாய் முடிச்சு ( வெரிக்கோஸ் ) ஏற்படக் காரணம் யாது?
(4) சாதரண ஒருவரின் குருதி அமுக்கம் 120/80 mm Hg ஆகும். தாழ் குருதி அமுக்கம், உயர் குருதி அமுக்கம் என்பவற்றை வேறுபடுத்துக
(5) உயர் குருதியமுக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள் 2 தருக


C. ஒருவரின் இதய வட்டத்தின்போது உண்டாகும் இதயத் துடிப்பினை அறிவதற்கான மின் இதய வரையி கீழே காட்டப்பட்டுள்ளது.




(1) இதய வட்டம் என்றால் என்ன?
(2) ஒரு இதய வட்டத்தின்போது இதயத்தின் ஒவ்வொரு செயன்முறைக்கும் எடுக்கும் காலத்தினை எழுதுக
(3) A,B,C இனால் காட்டப்படும் செயற்பாட்டினை எழுதுக
(4) மனிதனில் இதயத்துடிப்பினைத் தொடக்கி வைக்கும்பகுதி எது? இதுஎங்கே காணப்படுகின்றது.?

## இரசாயனவியல் வினா

02. NaoH உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மென்தகடு கலத்தின் வரிபடம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது




இங்கு கடல் நீரில் உள்ள குறித்த ஓர் உப்பு குறித்த செயன்முறை மூலம் NaOH தயாரிக்கப்படுகின்றது. இதன் போது நடைபெறும் தாக்கங்கள் X, Y கீழே தரப்பட்டுள்ளது.

$X - 2Cl \longrightarrow 2Cl^- + 2e$ $Y - H_2 \longrightarrow 2H + 2e$

A.

(1) NaOH தாயாரிக்கப்படும் முறையைக் குறிப்பிடுக

(2) அனோட்டில், கதோட்டில் நடைபெறும் தாக்கத்தை எழுதுக

(3) A, B என்பவற்றின் ஊடாக வெளிவரும் வாயுக்கள் எவை?

(4) நீர் மேலே வினா (3) கூறிய வாயுக்களை அறியும் பரிசோதனை ஒன்றைக் குறிப்பிடுக?

(5) F ஆகப் பயன்படுத்தப்படும் மின்பகுபொருள் எது?

(6) G இல் தோன்றும் விளைபொருள் யாது?

(7) அனோட்டுக், கதோட்டாகத் தொழிற்படும் மின்வாய்கள் கொண்டிருக்க வேண்டிய சிறப்பியல்புகள் எவை?

(8) மென்தகட்டின் பயன்பாடு யாது?

B.

(1) NaOH இன் பயன்பாடு இரண்டு தருக

(2) NaOH இன் சூத்திரத் திணிவைக் காண்க ( Na = 23, O =, H = 1 )

(3) 3 மூல் NaOH இனக் திணிவு யாது?


(4) 20g NaOH மூல் பெறுமானத்தைக் காண்க ( Na =23, O = 16, H = 1 )

(5) 0.25 மூல் NaOH கரைசல் $500cm^3$ ஐ பெறுவதற்கு தேவையான NaOH இன் திணிவு யாது?

(6) NaOH உடன் தாக்கமடைந்து $H_2$ வாயுவைத் தோற்றுவிக்கும் உலோகம் ஒன்று தருக

## பௌதிகவியல் வினா

03.




50kg திணிவுடைய மாணவன் ஒருவன் மேடையின் ஒரு முனை C யில் இருந்து மறு முனை D வரை சீராக ஆர்முடுகி $5m^{s-1}$ எனும் வேகத்தினை அடைந்த பின்னர் எவ்வித சுழற்சி இயக்கமுமின்றி மாறா வேகத்தில் மேடையிலிருந்து விலகி செங்குத்தாக நீச்சல் தடாகத்தில் குதிக்கிறான். குதித்த மாணவன் தடகத்தில் உள்ள புள்ளி A வரை சென்று மீண்டும் தடாகத்தின் மேற்பகுதிக்கு வந்து நீந்தி கரை E ஐ அடைந்தான். ( ஈர்வையிலான ஆர்முடுகல் $10ms^{-2}$, நீரின் அடர்த்தி $1000kgm^{-3}$ )

A.

(1) மேடை மீது ஓடும் மாணவனின் ஆர்முடுகல் யாது?

(2) மாணவன் C யில் இருந்து D ஐ அடைய எடுக்கும் நேரம் யாது?

(3) a. மாணவன் தனது ஆர்முடுகலுக்கான விசையினை எவ்வாறு பெறுகின்றான்?

b. மாணவன் ஆர்முடுகலுக்குப் பயன்படுத்திய விசையைக் காண்க

(4) மேடையிலிருந்து விலகி நீரைத் தொடுவதற்கு எடுத்த நேரம் யாது?

(5) ஓடும்போது மாணவன்மீது தொழிற்படும் விசையினை தெளிவாக வரைந்து காட்டுக

B.

(1) மாணவன் மேடைமீது உள்ளபோது கொண்டுள்ள அழுத்த சக்கி யாது?

(2) மாணவன் நீரைத் தொடும்போது கொண்டுள்ள மொத்த இயக்கப்பாட்டு சக்தியைக் காண்க

(3) ஓடும்போது மனிதனில் நிகழும் சக்தி நிலைமாற்றத்தை எழுதுக

(4) மாணவன் வளியில் செல்லும் வேகத்தினை விட நீரில் செல்லும் வேகம் குறைவதற்கான காரணத்தினை விளக்குக

C.

(1) மாணவன் புள்ளி A இல் உள்ளபோது அவனில் தொழிற்படும் திரவ அமுக்கத்தினைக் கணிக்குக

(2) தடாகத்தின் அடிப்பரப்பு $20m^2$ எனின் மொத்த நீரினால் தடாகத்தின் அடியில் தாக்கும் அமுக்கத்தினைக் கணிக்குக

(3) நீரில் மிதக்கும்போது மாணவன்மீது தொழிற்படும் மேலுதைப்பு யாது

(4) மாணவன் மட்டு மட்டாக நீரில் மிதக்கும்போது அவனால் இடம்பெயர்க்கப்படும் நீரின் நிறை யாது

(5) மாணவன் நீந்தித் தடாகத்தை அடையும்போது அவனில் தொழிற்படும் விஞ்ஞான விதியினைக் குறிப்பிடுக.

---

## விடைகள்

01\. A. (1) A - மேற்பெருநாளம், B - தொகுதிப்பெருநாடி, C - சுவாசப்பை நாடி, D - வலது இதயவறை, E - வலது சோணையறை

(2) A - தொகுதிகளிலிருந்து இதயத்தை நோக்கி குருதியைக் கொண்டு வரல்

B - இதயத்திலிருந்து தொகுதிக்கு குருதியைக் கொண்டு செல்லல்

(3) அதிக அமுக்கத்துடன் குருதியைப் பம்பும்போது வெடிப்பதைத் தடுப்பதற்கு

(4) 'லப்' - இருகூர், முற்கூர் வால்புகள் மூடிக்கொள்ளும்போது உண்டாகும் ஒலி

'டப்' - அரைமதி வால்புகள் மூடிக்கொள்ளும் போது உண்டாகும் ஒலி

(5) C - $CO_2$ செறிவு அதிகம் B - $O_2$ செறிவு தெிகம்

B. (1) முடியுரு நாடி (2) முடியுரு நாடிகளில் அடைப்புக்கள் ஏற்படுதல்

(3) நாளத்தின் வால்புகளின் செயற்றிறன் குறைவதால் நாளங்களில் குருதி தேங்கி நிற்பதால் உண்டாகும்

(4) உயர் - சாதாரண குருதி அமுக்கத்தை விட அதிகரித்தல், தாழ் - சாதாரண அமுக்கத்திம் குறைதல்

(5) நித்திரையின்மை, அதகளவான மனக்கவலை, மது அருந்தல், புகையிலைப்பாவனை

C. (1) குறித்த சந்தத்திற்கும், காலத்திற்கும் இதய - சோணை அறைகள் சுருங்கி விரிதல்

(2) சோணையறைச்சுருக்கம் - 0.1 செக் , இதயவறைச்சுருக்கம் - 0.3 செக், இதயவறை விரிவு - 0.4 செக்

(3) A - சேயைறறைச்சுருக்கம், B - இதயவறைச்சுருக்கம், C - இதயவறை விரிவு

(4) இதயமுடுக்கி, கீழ்ப்பெருநாளம் திறக்கும் இடத்திற்கு அருகில்

02\. A. (1) மின்பகுப்பு (2) அனோட்டில் தாக்கம் - X, கதோட்டில் தாக்கம் - Y

(3) A - $Cl_2$ வாயு, B - $H_2$ வாயு (4) $Cl_2$ - செவ்வரத்தம்பூ இதழில் படச் செய்தால் வெளிறும்

$H_2$ - எரியு தணற்குச்சியை உள்ளே செலுத்த பொப் என்ற சத்தத்துடன் அணையும்

(5) NaCl (6) NaOH (7) தூய்மை, மின்பகுபொருளுடன் தாக்கமடையாதிருத்தல், விளைபொருளுடன் தாக்கமடையாதிருத்தல்

(8) மின்பகுபொருளும், விளைபொருளும் கலப்பதைத் தடுத்தல்

B. (1) மருந்து உற்பத்தி, சவக்கார உற்பத்தி, சாயஉற்ப்பத்தி

(2) 40 (3) $3 \times 40 = 120g$ (4) $1/40 \times 20 = 1/2$ மூல் (5) 5g (6) யுடஇ ஹுெ

03\. A. (1) $V^2 = U^2 + 2as$
$5^2 = 2a \times 5$
$a = 2.5\ ms^{-2}$

(2) $V = u + at$
$5 = 2.5 \times t$
$t = 2s$

(3) a. தரை மீது விசையைப் பிரயோகிப்பதன் மூலம் /தரைக்கும் காலிற்குமான உராய்வு விசை

(b) $F = ma$, $F = 50 \times 2.5$, $F = 125N$

(4) $S = vt$
$7 = 5t$
$t = 1.4s$

(5)



B. (1) $E_p = mgh$
$E_p = 50 \times 10 \times 7$
$E_p = 3500J$

(2) $K_p = mgh + 1/2mv^2$
$K_p = 3500 + 1/2 \times 50 \times 5^2$
$K_p = 4125J$

(3) இரசாயன சக்தி ⟶ இயக்கசக்தி

(4) நீரினால் மனிதன் மீது மேலுதைப்பு தெழிற்படுதல்

C. (1) $P = h\rho g$
$P = 1.75 \times 1000 \times 10$
$P = 17500Pa$

(2) அடர்த்தி = திணிவு / கனவளவு
1000 = திணிவு / 100
திணிவு = 100000kg

அமுக்கம் = விசை / பரப்பு
= 100000 × 10 / 20
= 50000Pa

(3) $50 \times 10 = 500N$

(4) 500N

(5) எந்தவொரு தாக்கத்திற்கும் சமானதும் எதிரானதுமான மறு தாக்கம் உண்டு

01) சேவலின் காலின் வரைபடம் அருகில் காட்டப்பட்டுள்ளது இதில் A இனால் காட்டப்படுவது




(i) சிறியகால் (ii) புலிநகம் (iii) போர்முள்ளு (iv) விரல்நகம்

02) படத்தில் காட்டப்படும் எமது நாட்டின் தேசியத்திற்காகப் பாடுபட்டு உழைத்தவர் யார்?



(i) ஆறுமுகநாவலர்
(ii) சுமங்கலதேரர்
(iii) சேர்பொன் இராமனாதன்
(iv) சேர் பொன்அருணாசலம்

03) புத்தளிப்புக் கருவி உருவாக்கப் பயன்படுத்தக் கூடிய பொருள்?

(i) பனையோலை (ii) வாழைத்தண்டு (iii) தென்னம்சிரட்டை (iv) தடித்துண்டு

04) "......................பெண்ணே கும்மியடி
குனிந்து வளைந்து கும்மியடி " இப்பாடல் எவ்வகையைச் சேர்ந்தது

(i) வயற் பாட்டு (ii) அருவிவெட்டு (iii) கும்மிப் பாடல் (iv) மீன்பிடி

05) படத்தில் காட்டப்பட்டுள்ள உடுத்தொகுதி யாது?



(i) வேட்டைக்காரன் (ii) தென்சிலுவை
(iii) ரிஷபம் (iv) விருச்சிகம்


06) அண்மையில் எமது நாட்டில் வெளியிடப்பட்ட புதிய நாணயத்தாள்களில் எந்தநாணயத்தில் நுரைச்சோலை அனல்மின்னிலையம், பரதநாட்டியம்,புளினிப்பறவையின் படங்கள்காணப்படுகின்றது.

(i) ரூபா 20.00 (ii) ரூபா 50.00 (iii) ரூபா 500.00 (iv) ரூபா 100.00

07) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த " கோர்கண்ண " என்று அழைக்கப்படும் பிரதேசத்திற்கு அண்மையில் கடலுடன் கலக்கும் நதி?

(i) மாணிக்ககங்கை (ii) மகாவலிகங்கை (iii) நில்வளகங்கை (iv) அருவியாறு

08) கிழ் உள்ள மின் சுற்றில் உள்ள மின்குமிழை ஒளிரச்செய்வதற்கு இரு செப்புக்கம்பிகளைப் பொருத்திக்காட்டுக?



பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைக் புள்ளிக்கோட்டில் எழுதுக?

09) நூறாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது என்பதற்குரிய எண்குறியை எழுதுக?

..............................................................................................................

10) 808 புத்தகங்களை ஒருவருக்கு 8 வீதம் வழங்கினால் எத்தனை மாணவர்களுக்கு வழங்க முடியும்?

..............................................................................................................

11) 2004. 01. 04 இல் பிறந்த நிசாந்தனுக்கு இவ்வருடம் (2013. 08. 04 ) இல் எத்தனை வயது ஆகும்.

......................வருடங்கள்..........................மாதங்கள் ..................................நாட்கள்

12) 6, 13, 34, 23, 9 இவற்றில் 2 ஆல் பிரிபடும் எண்களை எழுதுக?

..............................................................................................................


13) ஒருவர் வேலை ஒன்றை 4 நாட்களில் செய்து முடிப்பார். அவ் வேலையை 2 நாட்களில் செய்துமுடிக்க எத்தனைபேர் தேவை?

..............................................................................................................

14) 350g தேயிலையின் விலை ரூபா 280.00 எனின் 1kg தேயிலையின் விலை யாது?

..............................................................................................................


15)




உருவிலுள்ள பென்சிலின் நீளம் யாது?

.............................................................................................................


16)




உருவின் சுற்றளவு யாது ?

.............................................................................

17) பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?




A - B = 40 Km
B - C = 62 Km
C - D = 34 Km

(1) B - D யிற்கான தூரம் யாது?

.............................................................................

(2) A இருந்து ஊடாக D யிற்கான தூரம் யாது

.............................................................................

18) கடிகாரம் பிற்பகல் நேரத்தை 30 நிமிடம் முந்திக்காட்டுகின்றது. அதன் சரியான நேரத்தை நியம நேரமாக எழுதிக்காட்டுக?




.............................................................................

19) தரம் $5^B$ வகுப்பில் உள்ள பிள்ளைகளில் பங்கினர் பெண்கள் ஆவர் ஆண்களின் எண்ணிக்கை 8 எனின் வகுப்பில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

.............................................................................................................

20) நீர் கட்டணம் ஒன்று பின்வருமாறு அறவிடப்படுகிறது.

01 தொடக்கம் 30 வரையான ஒரு அலகிற்கு ரூபா 8.00
31 தொடக்கம் 60 வரையான ஒரு அலகிற்கு ரூபா 12.50
61 - மேல் ஒவ்வொரு அலகிற்கும் ரூபா 15.00
சுமன் 56 அலகுகளைப் பாவித்தால் செலுத்தவேண்டிய கட்டணம் யாது?

.............................................................................................................

21) பரீட்சையானது பி.ப 2.00 மணிக்கு நிறைவடைந்தது அது பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெற்றது

பகுதி - I 45 நிமிடங்கள்
பகுதி - II 30 நிமிடங்கள்
பகுதி - III 1 மணி 15 நிமிடங்கள்

எனின் பரீட்சை ஆரம்பித்த நேரம் யாது?

.............................................................................................................

22) பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

| விளையாட்டு | ஆண் | பெண் |
|---|---|---|
| உதைப்பந்து | 45 | 25 |
| கூடைப்பந்து | 15 | 10 |
| கிக்கெற் | 56 | 35 |
| வலைப்பந்து | - | 45 |


(1) அதிகமானோர் விரும்பும் விளையாட்டு யாது

.......................................................................................................................................

(2) கிரிக்கெற் விளையாட்டை விரும்பும் ஆண்களுக்கும் உதைப்பந்தை விரும்பும் ஆண்களுக்கும் இடையேயான வித்தியாசம் யாது?

.......................................................................................................................................

(3) பெண்கள் மட்டும் விரும்பும் விளையாட்டுக்களை பின்வரும் வரைபில் வரைந்து காட்டுக




23) சரியான எழுத்துக்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக? ( லி , ழி , ரி , னி )

1) அக............ 2) எதி.......... 3) காசி................ 4) புத்திசா............

24) நீர் உமது குடும்பத்தாருடன் முதன் முதலாக புகையிரத வண்டியில் ஏறிப் பயணம் செய்தபோது அன்றைய நாளில் ஏற்பட்ட அனுபவங்களை ஆறு வாகியங்களில்,( ஒரு வாக்கியத்தில் குறைந்தது ஐந்து சொற்கள் இடம்பெறும் வகையில்) எழுதுக.

(1) ...........................................................................................................

...........................................................................................................

(2) ...........................................................................................................

...........................................................................................................

(3) ...........................................................................................................

...........................................................................................................

(4) ...........................................................................................................

...........................................................................................................

(5) ...........................................................................................................

...........................................................................................................

(6) ...........................................................................................................

...........................................................................................................

( தொடரும் ... )








- பில்கேட்ஸ்ட பையனா இருந்தாலும் கழித்தல் கணக்கு போடும் போது கடன் வாங்கி தான் ஆகனும்.
- என்னதான் பெரிய வீரனா இருந்தாலும் வெயில் அடிச்சா திருப்பி அடிக்க முடியாது ..


# தேவை ...



எமது ஸ்ரீ - தர்சனம் மாதந்த சஞ்சிகைக்கு ,
விற்பனை முகவர்கள் தேவை,
திறமைக்கு முதலிடம்

விற்பனை முகவர்கள் தேவையான பிரதேசங்கள்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,
வவுனியா, மன்னார், கண்டி, கொழும்பு,
மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம்.


இல :- 45, பாற்குழி வீதி,
தோணிக்கல், வவுனியா.
தொடர்புகொள்ள,
071 - 6746710 071 - 1775610




- உங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்து வைபவங்களுக்கும்
- சகலவகையான பந்தல்களையும், சகலவகையான தளபாடங்களையும்
- குறைந்த வாடகையில் உச்சப் பயனை அடைவதற்கு
- இன்றே நீங்கள் நாடவேண்டியது

இவற்றுடன்

- நாவிற்குச் சுவையான உணவு வகைகளை
- வைபவங்களின்போது உரிய நேரத்தில் பெற்றிடவும்
- நீங்கள் நாடவேண்டிய ஓரே இடம்



இல :- 84, காளிகோயில் வீதி,
குருமன்காடு,
வவுனியா.
Tel :- 024 - 2220219

No :- 84, Kalikovil Road,
Kurumankadu,
Vavuniya.
077 - 2209548

இச்சஞ்சிகை தாய்மொழி வளர்ச்சி மன்றத்தினால் வெளியிடப்பட்டது